யாழ்ப்பாண பொதுநூலகம்

விலை ரூபா 1-25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 ஆனி 30 ஜூலை 6 இதழ் 153

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 14-7-1986

முதல் சுற்றுப் பேச்சு:

## த. வி. கூ., அரசதரப்பினர் இரண்டரை மணி நேரம் சந்திப்பு

கொழும்பு, திங்கள்

தற்போது கொழும்பு வந்துள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியினர், ஜனாதிபதி ஜயவர்த்தனாவை நேற்றுச் சந்தித்து இலங்கை அரசு சமர்ப்பித்துள்ள யோசனைகள் சம்பந்தமாக பேச்சுவார்த்தைகள் நடத்தினர் 18 மாத கால இடைவெளிக்குப் பின்னர் நடைபெற்ற இச்சந்திப்பு சுமார் இரண்டரை மணி நேரம் நீடித்தது.

பண்டார நாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இச்சந்திப்பில் கூட்டணியின் சார்பில் திருவாளர்கள் அ. அமிர்தலிங்கம், எம். சிவசிதம்பரம், ஆர். சம்பந்தன், வி. யோகேஸ்வரன், ஆனந்தசங்கரி. சூசைதாஸன், நீலன் திருச்செல்வம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

த. வி. கூ. குழு முதலில் ஜனாதிபதியுடனேயே பேச்சு

(5 ம் பக்கம் பார்க்க)

● மருதனுமடத்திலிருந்து யாழ். பல்கலைக்கழகம்வரை

# பல்லாயிரக் கணக்கான மக்கள்

# மாபெரும் நீண்ட ஊர்வலம்!

## பேச்சுக்கள், மாகாணசபைக்கு எதிராக ஆர்ப்பரிப்பு!

(அலுவலக நிருபர் ஏ. வி. எம்.)

**தமிழர் விடுதலைக் கூட்டணியினர் அரச தரப்பினருடன் ஆரம்பித்துள்ள பேச்சு வார்த்தைகளைக் கண்டித்தும், மாகாணசபை யோசனைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் பிரமாண்டமான ஊர்வலமொன்று மருதனுமடம் சந்தியிலிருந்து யாழ். பல்கலைக்கழகம் வரை நேற்று இடம்பெற்றது. குடாநாட்டின் அனைத்துப்பகுதி மக்களும் பங்குகொண்ட சுமார் ஒன்றரை மைல் நீளமான இவ்வூர்வலம், 5 மணிநேரம் வரை நீடித்தது.**

இக் கண்டன ஊர்வலத்தில் கலந்துகொள்ளும் வகையில் நேற்றுக்காலை பல நூற்றுக் கணக்கான வாகனங்களில் மக்கள் அதிகாலை முதல் மருதனுமடம் சந்தியை வந்தடைந்த வண்ணமிருந்தன

இடம் போதாமையால் மருதனைடம் சந்தியிலும், இராமநாதன் கல்லூரி வளவுக்குள் மக்கள் கூட்டம் நிறைந்திருக்கக் காணப்பட்டது.

காலை 10 மணிக்கு மருதனுமடம் சந்தியிலிருந்து ஊர்வலம் ஆரம்பமானது.

ஒலிபெருக்கிகள் பொருத்தப்பட்ட வாகனங்கள் ஊர்வலத்துக்கு முன்னே செல்ல சுலோக அட்டைகளைத் தாங்கி கொண்டும், கோஷங்களை எழுப்பிக்கொண்டும் ஊர்வலத்தினர் கையைக் கோர்த்தபடி காங்கேசன்துறை வீதி வழியே யாழ்ப்பாணம் நோக்கி மெதுவாக நகர்ந்துகொண்டிருந்தனர்.

ஒவ்வொரு சந்திகள் தோறும் அவ்வப்பகுதி மக்கள் குழுமி நின்று ஊர்வலத்தினருக்கு தாகசாந்தி அளித்தனர். கூடவே ஊர்வலத்துடனும் சேர்ந்து கொண்டனர்.

ஊர்வலம் நாச்சிமார் கோவில் சந்தியில் முன்றலால் திரும்பி யாழ்.

(5ம் பக்கம் பார்க்க)

## இலங்கை தேசிய சின்னத்தில் மாற்றம்!

(கொழும்பு ஞாயிறு)

இலங்கையின் தேசிய சின்னத்தில் பல மாற்றங்கள் கொண்டுவரப்படவுள்ளன. அத்துடன் தேசிய சின்னம் எவ்வகையில் உபயோகப்படுத்தப்படவேண்டும் என்பதை அறிவுறுத்தும் புதிய சட்டங்களும் ஆக்கப்படவுள்ளன

இவை சம்பந்தமாக ஆராய்வதற்கென விசேட குழுவொன்று அரசினல் நியமிக்கப்பட்டுள்ளது. (ய-செ)

## தள்ளாடியில் இராணுவ முற்றுகை முறியடிப்பு

### புலிகள் அறிக்கை

யாழ்ப்பாணம், திங்கள்

மன்னார் தள்ளாடி இராணுவ முகாமிலிருந்து புறப்பட்ட முன்நூறுக்கும் அதிகமான இராணுவத்தினர் அடம்பனிலுள்ள தமது முகாமை முற்றுகையிட எடுத்த முயற்சிகள் தமது போராளிகளால் முறியடிக்கப்பட்டதாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க அரசியல் பிரிவு நேற்று விடுத்த அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: ''இந்த இராணுவ முற்றுகையின்போது இராணுவத்திற்கு உதவியாக வந்த இரு ஹெலிகொப்டர்களும், இரு குண்டு வீச்சு விமானங்களும், ஒரு கடல் விமானமும் குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தியபோதிலும் எமது போராளிகள் நடத்திய கடுமையான தாக்குதல்களினல் இவை யாவும் பின்வாங்கின.

இச்சம்பவத்தின்போது எமது

(5 ம் பக்கம் பார்க்க)

## கண்டன அறிக்கை

யாழ்ப்பாணம், திங்கள்

''தற்போது அமுல் செய்யப்பட்டிருக்கும் வாகன அனுமதிப்பத்திர நடைமுறையானது யாழ் குடாநாட்டு மக்களை பழிவாங்கும் ஒரு நடவடிக்கையாகும்'' என்று தமிழ் பேசும் மக்கள் ஒடுக்கப்படுவதற்கெதிரான போராட்டத்திற்கான இணைப்புக்குழுசார்

(5ம் பக்கம் பார்க்க)

மாகாணசபை யோசனைகள்:

## இனப்பிரச்னைக்கு நிரந்தர தீர்வாகமாட்டாது!

### போராளிகள் கூட்டாக கருத்து!!

[ஏ. வி. மாணிக்கம்]

''அரசாங்கம் மீண்டும் தன்னை பலப்படுத்துவதற்காகவே இடைக்காலத் தீர்வாக மாகாணசபை யோசனையை முன்வைக்கிறது. இது இனப்பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வாக இருக்கமாட்டாது எமது மக்களை ஆயுதபலத்தைக் கொண்டே பாதுகாத்து வருகிறோம். நாம் ஆயுதங்களைக் கீழே வைப்போமானல் எமது தமிழ் மக்களை பாதுகாப்பது யார்?

ஐந்து தமிழீழ விடுதலை அமைப்புக்களின் பிரதிநிதிகள் கூட்டியபத்திரிகையாளர் மகாநாட்டில் நிருபர் கேட்ட

(5 ம் பக்கம் பார்க்க)

## சூட்டுக் காயக்காரர் விபரம் சேகரிப்பு!

பண்டத்தரிப்பு, ஞாயிறு

''யாழ். மாவட்டத்திலுள்ள அரசாங்க வைத்தியசாலைகளில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுக்காக சிகிச்சை பெறுபவர்கள் பற்றிய முழு விபரங்களையும் தமது அலுவலகத்திற்கு தினசரி அனுப்பிவைக்கவேண்டும்'' என்று யாழ் பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் தமது பிரிவிலுள்ள சகல

(5ம் பக்கம் பார்க்க)

இரு வீடுகளில்

## லட்சம் பெறுமதியான பொருட்கள்களவு!

யாழ்ப்பாணம், திங்கள்

இருபாலை கிழக்கிலுள்ள இரு வீடுகளில் கடந்த வியாழக்கிழமை இரவு சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் இனந்தெரியாதோரால் களவாடப்பட்டுள்ளன.

கடந்தவியாழக்கிழமைஇரவு ஒரு மணியளவில் இருபாலை கிழக்கு பாலச்சந்திரன வீட்டிற்குள் உட்புகுந்த திருடர்கள் வீட்டிலுள்ளவர்கள் ஆழ்ந்த உறக்கத்திலிருந்ததைப் பயன்படுத்தி அவ்வீட்டிலிருந்த பணம், நகைகள் உட்பட சுமார் ஐம்பதினுயிரம் ரூபா பெறுமதியான பொருட்களைக் களவாடிச்சென்றுள்ளனர்.

இந்த வீட்டிற்கு அருகிலுள்ள பாலசுப்பிரமணியம் என்பவர் வீட்டிற்குள்ளும் இதே இரவில் சமயலறையின் யன்னலைப் பிரித்து உட்புகுந்த திருடர்கள் அங்கிருந்த பணம், நகை உட்பட சுமார் ஐம்பதினுயிரம் ரூபா பெறுமதியான பொருட்களை களவாடிச் சென்றுள்ளனர்.

இவ்விரு கொள்ளைகளினலும் இப்பகுதியிலுள்ளவர்கள் பெரும் அச்சம் கொண்டுள்ளனர். (து)

“பௌத்தர்கள் எதிர்த்தாலும்

## புதியயோசனைகளை ஜனாதிபதி கைவிடமாட்டார்!” - சிவ்சங்கர் நம்பிக்கை

(சென்னை)

''பௌத்த மதத் தலைவர்கள் எதிர்க்கிருர்கள் என்பதற்காக இலங்கை இனப்பிரச்னை குறித்தபுதிய யோசனைகளை ஜனாதிபதி ஜயவர்த்தன கைவிடமாட்டார்'' என்று இந்தியவெளியுறவு அமைச்சர் திரு. சிவ்சங்கர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

சென்னையில் நேற்று இடம் பெற்ற பத்திரிகையாளர் மகாநாடொன்றிலேயே அமைச்சர் சிவ்சங்கர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது: ''ஜனாதிபதி ஜயவர்த்தன தெரிவித்துள்ள யோசனைகள் இனப்பிரச்னைத் தீர்வுக்கான அடிப்படை ஆதாரமானதாகும். கூட்டணியினருடன் இதுபற்றிப்பேசும்போது தமிழ் சிறுபான்மை

(5ம் பக்கம் பார்க்க)

# அரி விளம்பரம்

## விற்பனைக்கு

நல்லநிலையிலுள்ள86ஸ்ரீ5642 HONDA MB 8 விற்பனைக்குண்டு. தொடர்பு: நித்தியானந்தம் 131/4, பருத்தித்துறை வீதி, நல்லூர். நல்லூர் சிவன் கோயில் முன்பாக உள்ள ஒழுங்கை [C 3453]

வீட்டுத்தளபாடங்கள் Show Case, கட்டில், அல்மாரி, கண்ணாடிமேசை Dressing Table தையல்மெஷின், Kenwood Chef, எவர்சில்வர், Pyrex ரீசெற் Formica சாப்பாட்டு மேசை, கதிரைகள், ஹோல் செற், Sanyo Oven, Baby Cot, மற்றும் பல உடன் விற்பனைக்குண்டு. 326, Main Street, யாழ்ப்பாணம். (மாவடிச் சந்தி.) C 3414]

இறக்குமதி செய்த மீன் சாப்பாடு[Fish Max] மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. M. G. M. 777, K K S Road, and 208, 1st Cross St. Jaffna Telephone 22611. (A 920)

## தேவை

இனிப்பு, சிற்றுண்டி, வகைகள் தயாரிப்பதற்கு அனுபவமுள்ள அல்லது மனையியல் கற்றபெண்கள்இருவர்தேவை C/o PILOT INSTITUTE, 151, செம்மணிறோட், நல்லூர் கல்விக்கந்தோருக்கு அண்மையில்.) C 3471

நல்ல நிலையிலுள்ள Honda C-90(Vespa)ஸ்கூட்டர் தேவை தொடர்பு: J. P. T. Ltd, 3, நவீனசந்தை, (மேல்மாடி), யாழ்ப்பாணம். A 931

யாழ். நகரில் வளர்ந்துவரும் ஒரு ஹோட்டலுக்கு Stewards —Cooks தேவை. அனுபவ சான்றிதழ்களுடன் நேரில் வருக. Old Park Chinese Restaurant 207, Old Park Road, Jaffna. C 3470

வருமானவரிக் கணக்கெழுதுவதற்கு அனுபவம் வாய்ந்த கணக்காளர் தேவை. நற்சாட்சிப் பத்திரங்களுடன் நேரில் வரவும். M/S சலாம்ஸ் 95. கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். [C 3463]

## தேவை

நன்கு அனுபவமுள்ள சமையல் வேலை தெரிந்தவர்களும், வெயிற்றர் வேலை செய்யக்கூடிவர்களும் உடன் தேவை. நேரில்வரவும். றிக்கோசுவீற்ஸ் அன் கிறீம் கவுஸ், 370, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் [C 3454]

தெல்லிப்பளையில் அமைந்துள்ள தொழிற்சாலைக்கு அனுபவம் உள்ள ஒரு லேத்மன் தேவை. 40 வயதுக்கு மேற்பட்டவராகவும், தெல்லிப்பளையிலிருந்து 3 மைல் சுற்றுடலில் வசிப்பவரும் விரும்பத்தக்கது. 18-7-86 க்குமுன் விண்ணப்பிக்கவும். டயானி எலெற்றிக்கல்ஸ், 222, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். [C 3433]

### சேவை

G. C. E. O/L அனுபவ ஆசிரியர்களைக் கொண்டு கணிதம், ஆங்கிலம், தமிழில் திறமைச்சித்திபெற ரீயூசன் தரப்படும். வாடகை வீடுகள் அறைகள் தேவையானோர் விண்ணப்பிக்கவும். மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். (C3413)

### பயிற்சி

Radio T. V. தொழில்நுட்ப பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பம் 15-07-86. விபரங்கட்கு எலக்றோனிக் றெயினிங் சென்றர், வி. நித்தியானந்தன், கல்வளை றோட், சண்டிலிப்பாய். [C 3457]

### மணப்பந்தல்

குருகுல இனத்தைச் சேர்ந்த வசீகர தோற்றமுடைய G.C.E. வரைபடித்த 25வயது உடைய கிறிஸ்தவ மணப்பெண்ணுக்குமணமகன்தேவை சீதனம் கொடுக்கப்படும். அரசாங்க, கூட்டுத்தாபன ஊழியர், வியாபாரிகள் விரும்பத்தக்கது. தொடர்பு: A.D.கந்தவனம், கற்கோவளம், பருத்தித்துறை. C 3469



காரைநகர் வாரிவளவு நல்லியக்கச்சபையின் கல்வி ஊக்குவிப்புத்திட்டத்தின் கீழ் கல்விப்பொதுத் தராதரப்பத்திர சாதாரணப் பரீட்சையில் ஏழு அதிவிஷேட சித்திபெற்ற காரைநகர் பிரிவுப் பாடசாலை மாணவர்களுக்கு தலா 500 ரூபா பரிசு வழங்கப்பட்டது. இவ்வருடம் இரண்டு மாணவர்களுக்கு இப்பரிசு வழங்கப்பட்டது.

மேற்படி சபைநடத்திய பரிசளிப்பு வைபவத்தில் காரைநகர் சுந்தரமூர்த்திநாயனார் வித்தியாலய அதிபர் திரு. செ தேவதாசன் இப்பரிசுக்குரிய சேமிப்புப் புத்தகத்தை மாணவர் ஒருவர்கு வழங்குவதையும் நல்லியக்கச்சபையின் செயலாளர் திரு. ச. பத்மநாதன் அருகில் நிற்பதையும் இப்படத்தில் காண்க. (படம்: மண்டைதீவு நிருபர்)

### பயிற்சி வகுப்பு

பண்டத்தரிப்பு, ஞாயிறு யாழ். சுகாதாரப் பிரிவில் பரிசோதகர் (அற்றண்டன்) பதவிகளுக்கு தெரிவு செய்யப்பட்ட ஆண், பெண் இருபாலாருக்குமான மூன்றுமாதகால பயிற்சி வகுப்பு தெல்லிப்பளை மாவட்ட வைத்தியசாலையில் இம் மாதம் 21ம் திகதி ஆரம்பமாகும்.

இது தொடர்பான கடிதங்களை சம்பந்தப்பட்டவர்களுக்கு யாழ். பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் அனுப்பி வைத்துள்ளது. தபால் சேவை தாமதத்தினால் இக் கடிதம் கிடைக்காதவர்கள் உடனடியாக தமது அலுவலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு யாழ் பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர். என். ஏ. கனகசபை தெரிவித்துள்ளார்.

### கல்விப் பொருட்காட்சி

பண்டத்தரிப்பு, ஞாயிறு

மாதகல் பகுதியிலுள்ள நான்கு பாடசாலைகள் ஒன்றிணைந்து மாதகல் சென். யோசெவ் மக வித்தியாலயத்தில் நடாத்திய கல்விக் கண்காட்சியை காங்கேசன்துறை வட்டாரக்கல்வியதிகாரி திரு. பொ. சிவஞானசுந்தரம் திறந்து வைத்தார். மாதகல் மேற்கு அ. த. க. பாடசாலை, மாதகல் விக்னேஸ்வரா வித்தியாலயம் மாதகல் சென், தோமஸ் பெண்கள் பாடசாலை மாதகல் சென் ஜோசேவ் மகா வித்தியாலயம் ஆகியனவே இந்த பொருட்காட்சியை ஒன்றிணைந்து நடாத்தின.

## கொப்ரு தேவை

வாங்குபவர்:

ச. சேதுகாவலர்,

47, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

(வள்ளுவர் சிலையடி) (A 790)

## DIABETIC BREAD

Now Available, Early orders Adviced

Pedrupillais Premier Bakery,

73, Main Street, Jaffna.

T. P. 22644 Estd; 1865

தவிட்டுப்பாண் இன்று முதல் விற்பனையாகும். முன் ஓடர் ஏற்றுக்கொள்ளப்படும்.

(C 3459)

## தேவை

தையல் வெட்டு வேலைக்கு (CUTTING) அனுபவம் வாய்ந்த பெண்மணி ஒருவர் உடன் தேவை. காலை 10 — 12 வரைக்கும் மாலை 4 — 6 வரைக்கும் நேரில் தொடர்பு கொள்ளவும், அருகாமையில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது.

161, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

(Dr. யோகநாதன் டிஸ்பென்சரிக்கு முன்பாக)

(C 3464)

## டெக்னிக்கல் என்ஜினியரிங் இன்ஸ்ரிடியூட்

TECHNICAL ENGINEERING INSTITUTE

- எலக்ரோனிக்ஸ் அன்ட் ரேடியோ, T. V. ரிப்பியாரிங்,
- ஆட்டோ மோபைல் ரிப்பியாரிங்,
- எயார்கென்டிசனர் அன்ட் ரேப்பிரிஜிரேட்டர் ரிப்பியரிங்,
- எலெக்ரிக்வயரிங்.

புதிய வகுப்புகள் ஆரம்பம்

C/o PILOT INSTITUTE,


151, செம்மணி றேட், நல்லூர்.

(கல்விக்கந்தோருக்கு அண்மையில) (A 795)

## 7-ம் வருட நினைவஞ்சலி



க. விஸ்வசோதிரத்தினம் (இன்பம்)



ச. செல்வரத்தினம் (செல்வம்)

மலர்வு: 30-03-1952 — 27-10-1950

உதிர்வு: 14-07-1979

வீரத்துக்கொரு வேங்கை காட்டில் என்றால்
விடுதலைக்கொரு வேங்கை நாட்டில் என்று
தீரத்தில் திறமையில் காட்டி நின்ற
வீரனே விஸ்வ சோதி ரத்தினமே
விடுதலைப் பாதையில் அடி எடுத்தாய்
வெற்றி முரசொலி கேட்கு முன்னே
படுகொலை செய்தாரே பாவியர்கள்
பணியது தொடராமல் முறித்து விட்டார்
இன்பமே, செல்வமே எங்கள் நெஞ்சில்
என்றுமே வாழுவீர் ஈது உண்மை.

நவாலி தெற்கு, மானிப்பாய்.

பெற்றோர், சகோதர–சகோதரிகள், செல்வத்தின் மகன் கண்ணன், மனைவி, சகோதரிகள்.

(C 3410)

# தென்னுபிரிக்காவுக்கு எதிராக ஆபிரிக்கர் ஆயுதப் போராட்டம்

## ஐ. நா. ஆதரவான நமீபியா மகாநாட்டில் தீர்மானம்

லண்டன், ஜூலை 13

"கறுப்பின விரோத தென்னுபிரிக்க அரசுக்கு எதிராக அப்பிராந்திய மக்கள் ஆயுதப் போராட்டத்தை மேற்கொள்ள வேண்டும்'' என்று ஐ. நா. ஆதரவிலான 'நமீபியா குறித்த மாநாடு' தீர்மானம் எடுத்துள்ளது.

நமீபியா நிலைமைகள் குறித்து ஆராயும் வகையில் கூட்டப்பட்ட இம்மாநாடு நேற்று முன்தினம் முடிவுற்றது. மேற்படி மாநாட்டின் இறுதியிலேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

இப்படியான நடவடிக்கையின் மூலமே இன வெறிகொண்ட தென்னுபிரிக்க அரசினுல் ஏற்பட்டுள்ள கொந்தளிப்பு நிலைமைகளுக்கு ஒரு முடிவுகட்டி, அப்பிராந்தியத்தில் அமைதி நிலைமையை மேற்கொள்ள முடியும் என்றும் மாநாடுதெரிவித்துள்ளது.

பிறிட்டோரியா அரசுக்கு எதிராக மேற்கொள்ளப்படவுள்ள தடைகளை அறிவிக்குமாறும் மேற்படி மாநாடு உலக நாடுகளை வலியுறுத்தியுள்ளது.

இதேவேளை தென்னுபிரிக்காவுக்கு எதிரான பொருளாதாரத் தடையை அமுல்படுத்த பிரிட்டன் தவறிவிட்டதை எதிர்க்கும் வகையில் இவ்வாண்டு எடின்பராவில் நடைபெறவிருக்கும் காமன் வெல்த் விளையாட்டுகளில் தாம கலந்து கொள்ளப்போவதில்லை என்று உகண்டா அறிவித்துள்ளது. (ரா)

## தீவுப்பகுதி இருள்மயம்

ஊர்காவற்றுறை, ஞாயிறு

கடந்த செவ்வாய்க்கிழமை தொடக்கம் இன்று வரை தீவுப்பகுதி எங்கும் மின்சாரமின்றி இருள் மயமாக இருக்கிறது.

## பாகிஸ்தானில் புயல் பலர் பலி!

கராச்சி, ஜூலை. 13

பாகிஸ்தானின் வடபகுதியில் நேற்றுமுன்தினம் வீசிய கடும்புயலினுல் பெரும் அழிவுகள் ஏற்பட்டுள்ளன. பலர் பலியாகியுள்ளதுடன் பலர் பலத்த காயமடைந்துள்ளார்கள். இதுவரை பதின்மூன்று சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டது.

இஸ்லாமாபாத்துக்கு 95வது கிலோ மீட்டர் தொலைவிலேயே இந்த புயல் அழிவு ஏற்பட்டுள்ளது.

கட்டிடங்கள் தரைமட்டமாகியுள்ளதுடன் ஆயிரக்கணக்கானோர் வீடுகளை இழந்துள்ளனர் தொலைத்தொடர்பு மின்சாரம் ஆகியனவும் பாதிக்கப்பட்டுள்ளன. போக்குவரத்து முற்ருக தடைப்பட்டுள்ளது.

லாகூர். ராவல்பிண்டி, இஸ்லாமாபாத், நௌசரா உட்பட பல நகரங்கள் ஸ்தம்பித்துள்ளதுடன், மீட்புப்பணியில் படையினர் மும்மரமாக ஈடுபட்டுள்ளதாகவும் கூறப்பட்டது.

இதேவேளை சீனுவில் வீசிய புயலினுல் இதுவரை 54பேர் இறந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. [ரா]

## வல்வை ராணுவமுகாமுக்கு படையினர் குவிப்பு

வல்வெட்டித்துறை, ஞாயிறு

வல்வெட்டித்துறை இராணுவமுகாமுக்கு மேலதிக இராணுவத்தினர் நேற்று முன்தினம் காலை வந்திறங்கினர்.

வெள்ளி காலை சுமார் எட்டு மணியளவில் மேற்குத் திசையிலிருந்து வந்த பீரங்கிரோந்துப் படகு வல்வை இராணுவ முகாமுக்கு நேராக நிறுத்கப்பட்டது

அதிலிருந்து சிறிய 'பிளாஸ்ரிக்' படகு இறக்கப்பட்டு, இராணுவத்தினரும் இறக்கப்பட்டனர். பிளாஸ்ரிக் படகு இராணுவ முகாம் கரைக்கு ஐந்து ஆறு தடவைகள் இராணுவத்தினரைக் கொண்டு வந்து இறங்கியது.

அதே நேரத்தில் வல்வை இராணுவ முகாமிலிருந்தும் இராணுவத்தினர் சென்று பீரங்கிப் படகிலும் ஏறியதைக் காணக்கூடியதாக இருந்தது.

## வாழ்வின்முன்னேற்றத்திற்கு அமைதி வழிவகுக்கும்

சாவகச்சேரி திங்கள்.

"அமைதி ஆனந்தமானது. மனித வாழ்வின் முன்னேற்றத்துக்கு அமைதி தான் வழி வகுக்கும். அறவழி மூலம் புதிய சமுதாயம் படைக்க உழைத்து வரும் அறவழிப் போராட்டக் குழுவின் பணிகள் பாராட்டப்பட்டு ஊக்கப் படுத்தப்பட வேண்டியவையாம்.''

இவ்வாறு யாக்கரு அரசினர் வித்தியாலயத்தின் முன்னுள் அதிபர் திரு. எஸ். முருகேசு' மேற்படி வித்தியாலயத்தில் நடைபெற்ற அறவழி பாலர் கழகத்தின் கலை, கலாச்சார நிகழ்ச்சிகளுக்குத் தலைமை வகித்து உரையாற்றும் போது தெரிவித்தார்.

இந் நிகழ்ச்சியில் யாக்கரு அறவழி பாலர் கழகத்தின் பிள்ளைகளது கலை,கலாச்சாரப் போட்டிகள் இடம் பெற்றது.

இவ் வைபவத்தில் விசேட விருந்தினிராக அறவழிப் போராட்டக் குழுவின் இயக்குனர் திரு. வீ எஸ். துரைராஜா பங்கு கொண்டு அங்கு உரையாற்றும்போது "தமிழ் சமுதாயத்தின் மேம்பாட்டுக்காக உழைத்து வருகின்ற அறவழிப் போராட்டக் குழு1986ம் ஆண்டு முதல் பாலர் கல்வி விடயத்திலும் கூடிய கவனம் எடுத்துச் செயல்பட்டு வருகின்றது. பாலர்களின் மனத்தில் உண்மை, நேர்மை, அன்பு, அறவழி, சமாதானம் போன்றவற்றினைப் பரப்பி அவர்களை எதிர்கால நற் பிரஜைகளாக்குவது இன்றைய கால கட்டத்தில் முக்கியமானது'' என்றும் கூறினர்.

ஆசிரியை செல்வி த. உதயகுமாரி நன்றி கூறினர். (க)

## பிரிட்டிஷ் கொள்கைக்கு எதிர்ப்பு காமன்வெல்த் விளையாட்டில் கென்யா கலந்துகொள்ளாது

லண்டன், ஜூலை 13

எடின்பரோவில் நடைபெறவிருக்கும் காமன்வெல்த் விளையாட்டுக்களிலிருந்து தாம் விலகிக்கொள்ளப் போவதாக கென்யா அறிவித்துள்ளது.

தென்னுபிரிக்கா குறித்த பிரிட்டிஷ் கொள்கைக்கு எதிர்ப்புத்தெரிவிக்கும் வகையிலேயே கென்யாவின் இந்த நடவடிக்கையாகும்.

இதுகுறித்து கென்யா அதிபர் தெரிவிக்கையில் பிறிட்டோரியா அரசுக்கெதிராக பொருளாதாரத்தடை விதிக்க பிரிட்டன் மறுப்புத்தெரிவித்து வருவதினுலேயே தாம் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாக கூறினுர்

இதேவேளை நைஜீரியா, கானு, உகண்டா ஆகிய நாடுகள் தாம் காமன்வெல்த் விளையாட்டுக்களில் கலந்து கொள்ளப்போவதில்லை என்று ஏற்கனவே அறிவித்துள்ளமை குறிப்பித்தக்கது. [ரா]

## இலங்கை அமைச்சுக்கு எதிராக மனு தாக்கல்

### ஈழத்தகவல் நிலையம் சென்னையில் அறிவிப்பு

புதுடில்லி, ஜூலை 13

இலங்கைப் போராளிகள் குழுக்களில் சில இந்திய கொள்கை ஆலோசனைக்குழுத் தலைவர் திரு. ஜீ பார்த்தசாரதியை நேற்று முன்தினம் புதுடில்லியில் சந்தித்தன.

இச் சந்திப்பின்போது இனப் பிரச்னை குறித்து இலங்கை அரசு தரப்பில் முன்வைக்கப் படடுள்ள புதிய யோசனைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது தமிழீழவிடுதலைப்புலிகள் தமிழீழ மக்கள் விடுதலைக்கழகம், ஈழவிடுதலை முன்னணி இயக்கம் ஆகிய அமைப்புக்கள் இப் பேச்சுவார்த்தைகளில் பங்குகொண்டன. வெளியுறவுச்செயலர் திரு ஏ பி வெங்கடேஸ்வரானும் உடனிருந்தார்.

### உயர்நீதிமன்றில் மனு தாக்கல்

இதேவேளை தமிழ் மக்களது உயிருக்கும், உடைமைக்கும் பாதுகாப்பு அளிக்க வேண்டிய தமது கடமையிலிருந்து தவறிவிட்டதாக குற்றம் சுமத்தப்பட்ட மனு ஒன்றினை தேசிய பந்தோபஸ்து அமைச்சர், பிரதி அமைச்சர் ஆகியோருக்கெதிராக இலங்கை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளதாக ஈழத் தகவல் நிலையம் சென்னையில் தெரிவித்துள்ளது. (ரா)

## இளைஞர்கள் அளித்த தண்டனை

நெல்லியடி ஞாயிறு

இளைஞர்களின் எச்சரிக்கைக்குப் பின்னரும் நெல்லியடிச் சடையொன்றில் சாராயம் சில்லறைக்கு விற்ற ஒருவர் மீது இளைஞர்கள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

முதலாவது முறைத் தண்டனையாக அவரிடமிருந்த சில முழுச் சாராயப் போத்தல்கள் பொதுமக்கள் பாவனையாளர் முன்னிலையில் நடுறோட்டில் உடைத்தெறியப்பட்டன மீண்டும் இந்த குற்றத்தைப் புரிந்தால் மேலும் கடும் தண்டனைக்குள்ளாக வேண்டுமென அவர்களால் எச்சரிக்கப்பட்டுள்ளது.

## வை. எம். சீ. ஏ. உதவி

ஊர்காவற்றுறை, ஞாயிறு

தீவுப்பகுதி மாணவர்களுக்கு வை. எம். சீ. ஏ. வீட்டுத் தோட்டம் செய்வதற்கு 750 ரூபா உதவிப்பணமாகவும், 750ரூபா கடனுகவும் கொடுக்க முன்வந்துள்ளது.

### கிரிக்கெட்:

## அடுத்த ஆண்டில் 50 ஓவர்கள்

புதுடில்லி ஜூலை-12

இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் அடுதத ஆண்டு நடைபெறவிருக்கும் உலக கோப்பைக்கான மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் போட்டிகளில் 60 ஓவர்களுக்கு பதிலாக 50 ஓவர்கள் இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. [ரா]

உலகச் செய்திகள்

## புவியியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் இரசாயனப் பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளராக கலாநிதி எஸ் மோகனதாஸ் இம்மாதம்முதல் நியமிக்கப்பட்டு கடமையினையும் ஏற்றுள்ளார்.

வைத்திய ஆராய்ச்சி நிலையத்தில் ஆராய்ச்சி உத்தியோகத்தராக கடந்த பத்து ஆண்டுகள் பணியாற்றிய இவர், தென்னை ஆராய்ச்சி நிலையத்திலும் பன்னிரண்டு வருடங்கள் ஆராய்ச்சியாளராகவும், ஆலோசகராகவும் இருந்து பின் பனை அபிவிருத்திச் சபையின் ஆலோசகராகவும் பணிப்பாளர் சபை உறுப்பினராகவும் கடமையாற்றியுள்ளார்.

## 'மலேரியா பரவும் அபாயம்'

வவனியா, ஞாயிறு

நெடுங்கேணிப் பகுதியில் மலேரியா நோய் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாததினுல் இப் பகுதியில் மலேரியா நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக நெடுங்கேணி வாசிகள் அங்கு விஜயம் செய்த வவனியா அரச அதிபர் திரு. கே. ஸி. லோகேஸ்வரனிடம் முறையிட்டனர்.

சிறுவர்களுக்கான ஐந்து வகை நோய்த்தடுப்பு திட்டமும் கூட இங்கு வெற்றிகரமான நிலையில் நடைபெறவில்லை, ஆஸ்பத்திரிக்கும் போதிய மருந்து வகைகள் வருவதில்லை என்றும் புகார் தெரிவிக்கப்பட்டு இருந்தது.

## பஞ்சாப் விவகாரத்தில்— பாகிஸ்தானின் தலையீடு குறித்து இந்தியா கவலை

புதுடில்லி ஜூலை-12

பஞ்சாப்பின் பயங்கரவாத நடவடிக்கைகளில் பாகிஸ்தான் சம்பந்தப்பட்டிருப்பது குறித்த விரிவானதகவல்களை இந்தியா பாகிஸ்தானிடம் கையளித்துள்ளது.

இந்தியாவின் உள்விவகாரத்தில் பாகிஸ்தானின் இந்தத் தலையீடு குறித்து தமது ஆழ்ந்த கவலையை இந்தியா தெரிவித்துள்ளதுடன், ஏற்கனவே பலமுறை இது குறித்து பாகிஸ்தானுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் இந்திய வெளிவிவகார அமைச்சர் திரு. பி. சிவ்சங்கர் கூறியுள்ளார்.

பல நாடுகளிலிருந்து மேற்கொள்ளப்படும் இந்தியாவுக்கு எதிரான பயங்கரவாத சம்பவங்கள் சம்பந்தமாக கனடா வெளியுறவு அமைச்சர் திரு. ஜோர்க்கிளார்கை அண்மையில் தாம் சந்தித்ததாகவும், அச்சந்திப்பு திருப்திகரமாக அமைந்ததாகவும் திரு. சிவ்சங்கர் கூறினுர். அத்துடன் இதுவிடயத்தில் பிரிட்டன் போதியளவு அரசியல் உறுதிப்பாடு அற்றிருப்பதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார், [ரா]

## சட்டவிரோத மின்பாவனையில் பாதிப்பு

கொடிகாமம், ஞாயிறு

சட்டவிரோத மின்பாவனையால் வடக்கு மிருசுவில், மீசாலை வாசிகள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

மணிவாக்கு

''ஒரு மனிதனின் முட்டாள்தனம் இன்னொரு மனிதனின் அதிர்ஷ்டமாகி விடுகின்றது''
—பிரான்சிஸ் பேக்கன்

# நமது நோக்கு

## இந்திய உயர் ஸ்தானிகர் வெளியிட்ட கருத்து

நாட்டில் தீவிரவாதம்-அதாவது தமிழ்த் தீவிரவாதம் ஏன் உருவாயிற்று, எப்படி உருவாயிற்று, இன்று அதன் பரிணாம நிலை என்ன?

இக்கேள்விகளுக்கு பதில் அளிப்பவர்கள் அரசியல் வாதிகளாய் இருக்கத் தேவையில்லை, அரசியல் படித்தவர்களாயும் இருக்க வேண்டாம். சாதாரண எந்த ஒரு தமிழ்மகனும் விளக்கமான பதில் தருவான்.

இதே கேள்விகள் தென்னிலங்கையில் கேட்கப்படும் போதுதான் குளறுபடிகள். பேரின மக்களின் குறுகிய இன உணர்ச்சியை வளர்த்து அதன்மூலம் அரசியல் மேலாதிக்கம் நடத்த விரும்பும் அரசியல் சக்திகள் ஒரு விதமாகவும், சோசலிஸ சார்பு சக்திகள் இன்னொரு விதமாகவும் வியாக்கியானம் அளிப்பார்கள். பெரும்பான்மை மக்கள் எந்தவகையில் சிந்திக்கத் தூண்டப்படுகிறார்கள் என்பதை கொழும்பிலிருந்து வெளியாகும் பத்திரிகைகள் சான்று பகிர்கின்றன.

இந்த நாட்டுக்கு சுதந்திரம் கிடைத்தது முதல் தமிழ் மக்கள் என்ன விதமாக நடத்தப்பட்டுவந்துள்ளார்கள் என்பதையும், அவர்களின் சட்டபூர்வமான உரிமைகள் எந்தவகையில் அபகரிக்கப்பட்டன என்பதையும் புரிந்து கொண்டால் அவர்கள் மத்தியில் இயற்கையாகவே எதிர்ப்புணர்வுகள் தோன்றி வளர்ந்து அவை போராட்டமுனைப்பாக மாறிய விதத்தைப் புரிந்து கொள்ளலாம்.

கொழும்பு ரேட்டரிக் கழக மதிய போசன விருந்தொன்றில் உரை நிகழ்த்தியுள்ள இந்திய உயர் ஸ்தானிகர் திரு டிக்ஸிற் இலங்கை அரசியலாருக்கு இந்தக் கருத்தை சரியாக இடித்துரைத்துள்ளார்.

''சீக்கிய தீவிரவாதமென்றால் என்ன, தமிழ்த்தீவிரவாதமென்றால் என்ன, பிரச்னையின் மூலத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். தமிழ்த் தீவிரவாதம் எப்படித் தோன்றியது என்பதைச் சிந்திப்பதற்கு துணிவும் நேர்மையும் உங்களுக்கிருக்கவேண்டும். நாம்அகதிகளை இந்தியாவுக்கு வரும்படி அழைப்புவிடுக்கவில்லை. அவர்களில் சிலர் ஆயுதம் ஏந்தினார்கள் என்றால் நியாய புத்தியுள்ளவர்கள் இது ஏன் நடந்தது என்பதைக் கண்டு பிடிக்க முயல வேண்டும். அதன் மூலம் ஒரு அரசியல் தீர்வைக்காணவேண்டும்''.

இந்தியாவில் தீவிரவாத முகாம்கள் இருப்பது பற்றிய கேள்வியொன்றுக்கு திரு டிக்ஸிற் அளித்த பதில் இது.

தீவிரவாதம் தோன்றுவதற்கு மூல காரணமாக இருந்த சூழ்நிலைகளை தீர்க்க சிந்தையுடன் ஆராய்ந்து தீர்த்துவைக்காமல் குறுகிய அரசியல் லாபத்தையே குறிக்கோளாகக் கொண்டிருந்தமையின் விளைவையே இந்த நாடு இன்று அனுபவிக்கின்றது.

இந்திய மண்ணில் தீவிரவாதிகள் செயற்படுவதற்கு அனுமதிக்கப்பட்டதின் தார்மிகம் என்னவென்று ஒரு நிருபர் கேட்டபோது, 1958, 1977, 1983 ஆகிய ஆண்டுகளில் இடம்பெற்ற சம்பவங்களின் தார்மிகம் என்னவென்று திருப்பிக் கேட்டிருக்கிறார் திரு. டிக்ஸிற்.

இளைஞர்கள் ஆயுதம் ஏந்துவதற்கு இம்மாதிரிச் சம்பவங்களே காலாகவிருந்தன என்பதை அவரது கேள்வி சுட்டிக் காட்டியுள்ளதுடன், இலங்கை இனப்பிரச்னையின் நெளிவு சுளிவுகளையெல்லாம் அவர் அறிந்துவைத்திருப்பதையும் எடுத்துக்காட்டியுள்ளது.

''அப்பாவிகளுக்கெதிரான பயங்கரவாதத்தையும் வன்செயலையும் யாரும் நியாயப்படுத்தமுடியாது'' என்று கூறியுள்ள அவர், ''ஆனால் அரசியலைத் தார்மிகத்தன்மையால் அளவிட முடியாது'' என்றார்.

'ஐலன்ட்' பத்திரிகைக்கு இது பிடிக்கவில்லை. ''இது ஒரு விசித்திரமான கோட்பாடு'' என்று குறிப்பிட்டுவிட்டு, ''மகாத்மா காந்தியை வழிகாட்டும் ஞானியாகக் கொண்ட ஒருநாட்டின் பிரதிநிதியா இப்படிக் கூறுகிறார்? அரசியலில் வழியும் முடிவும் பிரிக்கமுடியாதவை, என்றாரே அவர். இந்தியாவின் ஒருமித்த ஆத்மாவைச் சிதறடித்துவிட்டுச் சுதந்திரம் பெற்றிருந்தால் அது அர்த்தமற்றதாகவும் ஆழமற்றதாகவும் இருந்திருக்குமே அவருக்கு'' என்று அங்கலாய்க்கின்றது.

மேலும் சென்று; தமிழருக்குக் குறைகள் உண்டு என்பதை எப்போதுமே அங்கீகரித்து வந்துள்ளோம். குறைகள் இருப்பதென்பதற்காக வன்செயல்களால்தான் தீர்வு காணவேண்டுமென்டதில்லை என்று உபதேசிக்கின்றது.

குறைபாடுகள் உண்டு என்பதை அங்கீரித்தால் அந்தக் குறைபாடுகளைத் தீர்த்து வைப்பது தானே நியாயம். அதைவிடுத்து முப்பது ஆண்டுகளுக்கு மேலாக காலத்துக்குக் காலம் குறைபாடுகளை மேலும் மேலும் வளரவிட்டதுடன் 'இதுதான் தீர்வு ஏற்றுக்கொள் இல்லையோ பார!'' என்ற வகையில் வன்செயல்களாலேயே வற்புறுத்தியும் வந்தால் என்ன ஐயா செய்வது?

அப்பாவி சிங்களவர்களைக் கொல்வதுமூலம் பிரச்னை தீருமா? என்று கேட்கிறது ஐலண்ட். நியாயமான கேள்வி. அதே கேள்வியைத்தான் தமிழ் மக்களும் கேட்கிறார்கள். கடலில், வயலில், தொழிற்சாலையில், வீதியில் என்றில்லாமல், அப்பாவித் தமிழ் மக்களை ராணுவம் கொல்கின்றதே! அவ்வளவு வேண்டாம், இரண்டாம் உலக யுத்தத்தில் ஜப்பானியர் ஒருகுண்டு போட்டபோது கொழும்பு நகரமே வெறிச்சோடியதாமே; இங்கே வடக்கு கிழக்கில் எத்தனை குண்டுகள்? எத்தனை நாட்கள்? கொல்லப்பட்டவர்கள் எல்லாரும் தீவிரவாதிகள் தாமா?

கொலைகளை நிறுத்துங்கள் என்று கூறுவதில் பக்க சார்பு வேண்டாம்.

# காரைநகர் கோவளம் மீனவர் கண்ணீர்கதை

# மீனவரை கடல்வலயச் சட்டம் நோயாளி ஆக்கிவிட்டது!

எமது வாகனம் காரை நகரை நோக்கி ஓடியது.

புன்னாலைக் கடல்ஏரி தாண்டிவிட்டது. அதன் அழகு தனித்துவமானது. கடல்ஏரிக்கு நடுவில் சிறு தீவுகள். அருகே வெள்ளை, கறுப்பு நிறங்களில் ஆயிரக்கணக்கான கொக்குகள்.

சே... இதில் ஒரு உல்லாச விடுதி கட்டி பாரதியின் கனவான பத்துப் பன்னிரண்டு தென்னைமரம் நாட்டி... என நினைப்பதற்குள் எமது வாகனம் ஆ தியாகராஜர் வித்தியாலயத்தைக் கடந்துவிட்டது.

ஸ்டொப்!

ஆலடிச்சந்தி; காரைநகர்.

இங்கிருந்துதான் இரண்டரை மைல் தூரம் கோவளம் கடற்கரைக்குச் செல்லவேண்டும்.

காரை சிவகணேசனின் மோட்டார் சைக்கிள் என்னையும் ஏற்றிக்கொண்டு கடற்கரைப் பக்கமாக விரைந்தது.


அழகான ஒரே நீளக் கடற்கரை. திருகோணமலைத் துறையிலிருந்து அலஸ் தோட்டம் வரையுள்ள கடற்கரையே தோற்றுப்போகும் அழகு. அதன் பின்னணியில் சோகம்!

75க்கு மேற்பட்ட வாடிகள்; 100க்கு மேற்பட்ட பிளாஸ்டிக் வள்ளங்கள் எவருமேயின்றிக் கைவிடப்பட்டிருக்கின்றன.

காரைநகர் வெடியரசன் வீதியிலிருக்கும் கடற்றொழிலாளர் சங்கத்திற்குப் போனால் மீனவர்கள் துன்பம் அறியலாம் என அப்பகுதியை நோக்கி விரைந்தோம்.

கடற்றொழிலாளர் சங்கத் தலைவர் ஆ. சிவபாதம், உப தலைவர் மா. அம்பிகைபாகன், மற்றும் ம. கிருஷ்ணபிள்ளை, ஆ மாணிக்கம், மா. சிவனேஸ் ஆகியோர் எமக்குப் பேட்டி தந்தனர். அந்தப் பேட்டியின் கருத்துக்கள் கவனிக்கத்தக்கவை.

கடற்றொழில் செய்பவர்கட்குச் சலரோகம், நாரிப் பிடிப்பு என்பன ஏற்படாது. கடல்வலயச் சட்டத்தால் நான் நோயாளியாகிவிட்டேன். குடும்பமோ வறுமையில் வாடுகிறது எனப் பிரலாபித்தார் ஒரு மீனவர்.



வடிவாகத்தெரியும். நாம் வலை வீசுவதற்கு முன்பே எம்மை அவர்கள் வந்து கலைத்துவிடுவார்கள் என்றார் அவர்.

### பாதிக்கப்படவில்லை

இன்னொரு மீனவர் இடையிலே குறுக்கிட்டார். நாம்

களஆய்வு

● திக்கவயல் சி. தர்மகுலசிங்கம்

நடுக் கடலில் போடவேண்டிய வலைகளை வறுமை மிஞ்சவே முருகைக் கடலில் போட்டோம் வலைகள் அறுந்துவிட்டன. கடல்வலயச் சட்டம் நீங்கினாலு கடலுக்குப் போக எமக்கு என்னவழி என்றார் இன்னொருவர்.

களவாகத் தொழில்செய்தாவது குடும்பத்தைக் காப்பாற்ற முடியாதா? சில இடங்களில் அப்படியும் நடக்கிறதே எனக் கேட்டுவைத்தேன்

அதோ இருக்கிறது வெடியரசன் கோட்டை. அங்கிருந்து பார்த்தால் கிழக்கே கோட்டைமுகாம், வடக்கே கோவளம் கடற்கரைவரை தொழிலைத்தான் இழந்தோம். ஆனால் கோவளம் கடற்கரையில் ஒரேயொரு மீனவரைத் தவிர எவருமே கடற்படையினரால் தாக்கப்படவில்லை. 'ஈழநாடு' நடுநிலைப் பத்திரிகை என்றால் அதனையும் எழுதிக் கொள்ளுங்கள் என்றார் அவர்.

### மண்ணை விற்கிறார்கள்

காரைநகரைப் பொறுத்தமட்டில் மாதடை, வேரப்பிட்டி, ஐயனார் கோவிலடி, வலந்தலை, நீலக்காடு அகிய பகுதிகள் முற்றாகச் செயலிழந்துள்ளன. இம்மக்கள் வறுமை மிஞ்சவே தமது காணியிலிருந்து மணல்களை அள்ளி விற்றுக் கொண்டிருக்கிறார்கள் இதனால் ''காரைநகருக்குள் கடல் வலயம்'' என்பதன் கருத்தே விரைவில் வேறு பொருள் தரலாம் என ஒருவர் தெரிவித்தார்.

காரைநகரில் மேலே சொல்லப்பட்ட பகுதிகளுக்குள் 4000 மக்கள் தொழிலின்றி வாடுகின்றார்கள்.

மீன்கள் விற்கப்படும் பகுதிகளான சக்கலாவோடைச் சந்தியிலும், வாரிவளவுப் பகுதியிலும் மீன் விற்பனைப் பகுதிகளை நோட்டமிட்டோம்.

மோரோ மோர் என்று விற்ற கம்பன் காலம்போல் மீனோ மீன் என்று விற்ற இவ்விடங்கள் பழைய களையை இழந்துவிட்டன. சில மீன்கள் வருவதென்றால் அது புன்னாலைக் கடலேரியிலிருந்து தூண்டிலால் பிடிக்கப்பட்டதே எனத்தெரிய வந்தது.

காரைநகர் ஜெட்டிக்குள் எவருமே போகமுடியாது. அந்தப் பகுதியிலிருந்த மீனவர்கள் 600 மீற்றருக்குமேல் நகர்ந்துவிட்டார்கள். எனவே அங்கெல்லாம் மீன்பிடியாளர் இருக்கின்றார்களா எனப் புதிய யுத்திசெய்து பார்த்தோம்.

### வெளிச்சவீட்டில் ஏறி...

கோவளம் கடற்கரையிலிருந்து மேற்கே நடந்து, பின்பு திருப்பித் தெற்கே அரைமைல் நடந்தால் ஒருபெரிய வெளிச்ச வீடுவரும்.

அது கைவிடப்பட்டிருக்கின்றது அந்தப் பெரிய வெளிச்ச வீட்டில் ஏறினால் காரைநகர்ப் பகுதியே தெரியும்.

வெளிச்ச வீட்டின் உயரத்திற்கு நாமிருவரும் ஏறிப் பார்த்தோம்.

''தோப்புக்காடு தெரிகின்றதா?'' என்றார் சிவகணேஸ்.

''மரங்கள் மறைத்துக்கொள்கின்றன'' என்றேன்.

நீலக்காடு தெரிந்தது.

அப்பாடா...... கடற்படை முகாம் தெரிகின்றது.

(5ம் பக்கம் பார்க்க)

# மண்டுவில் அம்மன் கும்பாபிஷேகம்

ஈழத் திருநாட்டின் யாழ்ப்பாணத்தீபகற்பத்திலே தென்மராட்சி எனப்படும் சாவகச்சேரி தொகுதியிலே மத்திய சந்தையில் இருந்து வடக்கே சுமார் ஒன்றரை மைல் தூரத்தில் மீசாலைக் கிராமத்தை மருவி டச்சு வீதியில் அமைந்துள்ளது தான் இலஞ்சியாரணியம் மண்டுவில் அம்மன் ஆலயம், இந்த ஆலயம் தென்மராட்சியில மிகவும் பழைமை வாய்ந்ததும் வரலாற்று தொன்மை மிக்கது மாகும்.

அற்புதங்கள் பொலியும் இவ் ஆலயத்தில் அமைந்துள்ள நீரூற்று மிக அற்புதமானது. பார்த்தால் ஒரு சிறு கிடங்கில் நாலு வாளி நீர் உள்ளது போல் இருக்கும். ஆனால் எப்படித்தான் இறைத்தாலும் இந்த நீரூற்று வற்றவே மாட்டாது.

அத்துடன் மருது மகிழ் கூட்டத்தின் நடுவே இவ் நீரூற்று இருப்பதால் மருந்துக் குணமுடையதாகவும் தீவினைகளை போக்கக்கூடியதாகவும் விளங்குகிறது இத்தகைய மனதுக்கு இதமளிக்கும் சூழலில் அடியார்களுககு அருள் பாலித்துக் கொண்டிருக்கிறாள் மனோன்மணி என்னும் நாமம்கொண்ட மண்டுவில் அம்மன்.

யாழ்ப்பாணத்தை டச்சுக்காரர் ஆட்சி செய்த கால ஆரம்பத்தில் வீதியமைத்தல் பொருட்டு டச்சு மராமத்து அதிகாரி வான்டீமொற் வீதியமைத்தல் வேலையைக்கவனிக்க தற்போது டச்சு வீதி என அழைக்கப்படும் இவ் ஆலய முன்பாக செல்லும் வழியால் தனது குதிரையில் வந்தான். அப்போது அவனது குதிரை நோய் கண்டு வீழ்ந்தது. அவ் வேளை இவ் ஆலய அர்ச்சகராக இருந்த வேலுப்பிள்ளைக்கந்தர் என்பவர் குதிரைக்கு வீபூதி இட்டு சுகப்படுத்தி வைத்தார்.

அந்த நன்றிக் கடனாக ஆலயம் இருந்த இலஞ்சியாரணியம் என்னும் சூழலை (ஆறு ஏக்கர் பரப்பு) அவருக்கு மானியமாக எழுதிக் கொடுத்தார். இதற்கு சான்றுகள் உண்டு. (ஆதாரம்: ஆலய வரலாறு நூல்)

மூன்னூறு ஆண்டுகள் பழைமை மிக்க இவ் ஆலயம் அன்றில் இருந்து சிறிது சிறிதாக வளர்ச்சியடைந்துவந்துள்ளது. மூர்த்தி தீர்த்த தல விசேடம் பெற்று கீர்த்தியுடன் விளங்கும் இவ் ஆலயத்தில் இன்று 14 ம் திகதி ஆனி அத்தத் திருநாளில் மகாகும்பாபிஷேகம் நடைபெற அம்பாள் அருள் பாலித்துள்ளாள். அந்த அருளரசி மண்டுவில் மனோன்மணி அம்மனின் அருள் நாடி மகா கும்பாபிஷேகக் காட்சி கண்டு மனிதப் பிறவியின் மாசு களைவோமாக.

கே.வி.கே.
திருலோகமூர்த்தி.

## இன்று

யாழ்ப்பாணம், திங்

சண்டிலிப்பாய் கிராம சேவையாளர் பிரிவு [மாசியப்பிட்டி உட்பட]மக்களின் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கான விழிப்புக்குழு இன்று பிற்பகல் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவுள்ளது,

இதற்கான கூட்டம் சண்டிலிப்பாய் வாணி விநோதன வித்தியாசாலையில் நடைபெறவுள்ளது [மா]

★ ★ ★

சாவகச்சேரி, திங்கள்

சாவகச்சேரி கிறீஸ்தவ திருச்சபையில் நடாத்தப்படுகின்ற பாலர் பாடசாலையின் விளையாட்டுப் போட்டி இன்று நடைபெறவுள்ளது.

## காரைநகர்....

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

இனிமேல் ஆபத்து...இறங்கி விட்டோம்.

### கைவிடப்பட்ட சிநோர் மீன்பிடி நிலையம்

காரைநகர் மக்களுக்கு அதிக வாழ்வுதந்த மீன்பிடி நிலையம் சிநோர் மூடப்பட்டுக்கிடக்கின்றது. இதனால் 400 தொழிலாளர்கள் வேலையின்றிக் கிடக்கின்றனர் அதன் அயலிலே இருந்த மீன்பிடிக் குடும்பங்கள் அகதிகளாகி உள்ளூருக்குள் போய்விட்டார்கள் மொத்தத்தில் காரைநகர் மீன்பிடி மக்கள் வறுமைக் கோட்டை நோக்கி நகர்ந்துகொண்டிருக்கிறார்கள்.


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**கந்தையா ஆறுமுகம்**
(ஓய்வு பெற்ற பொலிஸ் சார்ஜன்ட்)

மலர்வு: 09-04-1906
உதிர்வு; 07-07-1985

அன்னையில்லாக் குறையை நீக்கி பாசத்துடன் எம்மை வளர்த்து ஆளாக்கி வாழ்வளித்து கடமை முடிந்ததென்று கண்ணயர்ந்தீரோ. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்;
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.
C 3473

**லிடோ**
காலை 10-30, 2-30, 6-30
பாக்கியராஜ்-சரிதா நடித்த
**மௌனகீதங்கள்**
(கலர் - புதிய பிரதி)

**வெலிங்டன்**
10-30, 2-30, 4-30, 6-30 P-M
முதல் முறையாக யாழ் நகரில் காண்பிக்கப்படுகிறது.
**VENOM**
Action - Thrill


## மருதனுமடம்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தை சென்றடைந்தது.

ஒன்றரை மைல் நீளத்தைக் கொண்டிருந்த இவ்வூர்வலம், சுமார் 5 மணித்தியாலயங்கள் வரை நீடித்தது.

ஊர்வலத்தின் போது இழுத்து வரப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் அமிர்தலிங்கத்தின் கொடும்பாவியும் மைதானத்தில் வைத்து எரிக்கப்பட்டது.

### கோஷங்கள்

ஊர்வலத்தில் சென்றோர் பின்வரும் கோஷித்த வண்ணம் சென்றனர்.

மாகாண சுயாட்சி; ஜே. ஆர் இன் கண்துடைப்பு.

கொழும்பில் பேச்சுவார்த்தை இங்கு படுகொலை.

கூட்டணியே உன் பதவி ஆசை; தீரவில்லையா?

மக்கள் இராணுவ முகாமில்; கூட்டணி பஞ்சுமெத்தையில்

சிறிலங்காவின் ஆலோசகர்: நீலன் திருச்செல்வமா?

பேச்சுவார்த்தை வேண்டாம்; தனிநாடு வேண்டும்

கூட்டணி துரோகிகளை; தூக்கி எறிய வேண்டும்.

ஆவரங்கால் மகாநாட்டை; கூட்டணி மறந்தது ஏன்?

வட்டுக்கோட்டை தீர்மானத்தை; விட்டுக்கொடுத்தது ஏன்]

ஊர்வலம் முடிந்ததும் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் அரசியல் கட்சி மாநாட்டையும்மாகாண சபையையும் கண்டித்ததுடன் இந்திய மத்திய அரசு உள்ளிட்டு சர்வதேசமும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை அங்கீகரிக்குமாறு வேண்டுகோள்விடுக்கப்பட்டது.

இவ்வூர்வலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, ஈழப்புரட்சி அமைப்பு, தமிழீழ மக்கள் விடுதலைக்கழகம் தமிழீழ இராணுவம் ஆகிய ஐந்து அமைப்புகளின் போராளிகளும் கலந்து கொண்டனர்.

## முதல்சுற்று...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

நடத்தியது. சுமார் 45 நிமிநேரம் இது நீடித்தது பின்னர் அமைச்சர் லலித்துப அதன் பின்னர் ரணில் விக்கிரமசிங்கவும் பேச்சுக்களில் ஜனாதிபதியுடன் கலந்து கொண்டனர்.

இச்சந்திப்பின் போது அரசின் யோசனைகளை பற்றிய த. வி கூ வின் கருத்தைத் தாம் கூறியதாக திரு. அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார்

த வி கூ. ஜனாதிபதி இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தை இன்று மாலை நடைபெறவுள்ளது.

இன்றுமாலை நடைபெறவுள்ள சந்திப்பினையடுத்தே நாளை செவ்வாய்கிழமை நடைபெறவுள்ள அரசியல் கட்சிகளின் மாநாட்டிலும் கலந்து கொள்வது பற்றியும் ஏனைய அரசியல்கட்சிகளைச் சந்திப்பது பற்றியும் த. வி கூ. தீர்மானிக்கும் என அறியப்படுகிறது

இதனிடையே வவுனியாப் பிரைஜகள் குழுத்தலைவர் திரு சொர்ணபாலா த. வி. கூ வை நேற்றுச் சந்தித்தார். சுமார் 2 மணிநேரமாக இச்சந்திப்பு நீடித்தது.

தமிழ்ப் பகுதிகளின் ஏனைய பிரஜைகள் குழுக்களையும் சந்திக்கக்கூட்டணியினரார் ஆர்வம் கொண்டுள்ளதாகவும் இச்சந்திப்புகள் விரைவில் இடம் பெறலாம் எனவும் தெரியவருகிறது.

### 2 வாரம் தங்குவார்கள்

இதேவேளை கூட்டணிக்குழுவினர் சுமார் இருவாரங்கள் கொழும்பில் தங்குவர் என அறிவிக்கப்பட்டுள்ளது. முன்னதாக அவர்கள் கொழும்பில் ஒருவாரமே தங்கியிருப்பது என முடிவுசெய்திருந்தது தெரிந்ததே. [ய-வா]

## மாகாணசபை...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

கேள்விக்குப் பதிலளிக்கையில் விடுதலை அமைப்புக்களின் பிரதிநிதிகள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

நேற்றுமாலை இந்தப் பத்திரிகையாளர் மகாநாடு நடைபெற்றது.

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் [புளொட்], ஈழமக்கள புரட்சிகர விடுதலை முன்னணி [ஈ. பி. ஆர். எல். எவ்] ஈழப் புரட்சி அமைப்பு ஈரோஸ்] தமிழீழ விடுதலைப் புலிகள், தமிழ் ஈழ ராணுவம் ஆகிய ஐந்து விடுதலை அமைப்புகளின் அரசியல், பிரசாரப் பிரிவுகளின் முக்கிய பிரதிநிதிகள் இம்மகாநாட்டில் சமூகமளித்திருந்தனர்.

எமது பிரதேசத்தில் வசிக்கும் எமது மக்களின் உயிர் உடைமைகளின் பாதுகாப்புக்கு எமது மக்களாலேயே உத்தரவாதம் அளிக்கும்வரை எமது போராட்டம் ஓயாது.

''தமிழ் ஈழம்'' அமைப்பதே எமது இலட்சியம். இந்த லட்சியத்துக்காகவே ஆயுதமெடுத்து பொது எதிரியுடன் களத்தில் போராடிக்கொண்டிருக்கிறோம்.

போராட்டக் களத்தில் ஒரு கையில் உள்ள 5 விரல்கள் போல் 5 விடுதலை அமைப்புளும் போராடிக்கொண்டிருக்கிறார்கள். எமக்குள் சில பிரச்னைகள் இருந்தாலும் எமது லட்சியத்துக்காக ஒரே களத்தில் நின்று போராடுகிறோம், தொடர்ந்தும் ஒன்று சேர்ந்து போராடுவோம். இது உறுதி என்றும் 5 பிரதிநிதிகளும் ஒரே குரலில் தெரிவித்தனர்.

''தமிழீழ விடுதலைப் போராட்ட காலத்தின்போது இனப்பிரச்னை சம்பந்தமான பேச்சுவார்த்தை நடத்த 'திம்பு' மகாநாட்டுக்கு ஏன் போனீர்கள்? என்று நிருபர் ஒருவர் கேட்டதற்கு, தமிழர் விடுதலைக்கூட்டணி மட்டும் தான் தேசிய இனமான தமிழ் மக்களைப்பிரதி நிதித்துவப் படுத்துகிறது என்ற கூற்றை, சர்வதேச அரங்கில் முறியடிக்கும் நோக்கமாகவும் கூட்டணியினரின் போலி முகமூடியைக் கிளித்தெறியும் நோக்கத்துடனுமே நாம் கலந்து கொண்டோம்.

இம்மகாநாட்டில் நாம் கலந்து கொண்டதால் எமது கோரிக்கை சர்வதேச அரங்கில் முன்வைக்கப்பட்டது'' என்றார் ஒருபிரதிநிதி

மாகாணசபை தமிழ் மக்களின் அபிலாஷைகளை ஒரு போதும் நிறைவேற்றாது ஒரு நாட்டில் வாழும் மக்கள் நிம்மதியாக வாழுவது அந்த நாட்டின் பாதுகாப்புப்படையில் தான் தங்கியுள்ளது. எங்களைப் பொறுத்தவரை, பௌத்த இனவாதகொடுங்கோலாட்சியின் பாதுகாப்புப் படையைநம்பி தமிழ் பேசும் மக்கள் நிம்மதியாக வாழ முடியாது இதை நமது மக்கள் இன்று உணர்ந்துள்ளார்கள் அற்பசலுகைகளை நாம் ஏற்போமானால் நிச்சயமாக இத்தமிழ் மண்ணில் எந்த ஒருதமிழனும் வாழமுடியாது.

இனப்பிரச்னை சம்பந்தமாக நடைபெறும் பேச்சுவார்த்தை எல்லா சந்திப்புக்களிலேயும் ஈடுபடுபவர்களை நாம் தடுத்து நிறுத்தவில்லை. யாருக்கும் கருத்துச் சுதந்திரமுண்டு. அதற்கு மதிபபளிக்கின்றோம். இச்சந்திப்புகளினால் எமது தமிழீழ லட்சியத்திலிருந்து விலகிவிட்டதாகவோ களத்துக்குச் சென்றவர்கள் ஓய்ந்துவிட்டார்கள் என்றோ எவரும் எண்ணிவிட வேண்டாம். தமிழீழம் தான் எமது முடிந்த முடிவு. இன்று தமிழ்ப்பிரதேசத்தின் பல பகுதிகள் எமது கட்டுப்பாட்டில் உள்ளது. விரைவில் மட்டக்களப்பு, திருமலை, மன்னார், வவுனியா ஆகிய பகுதிகளையும் எமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவோம்.

'மாகாணசபையல்ல. சமஷ்டி அமைப்பைக்கூட நாம் ஏற்கத் தயாராக இல்லை'' இவ்வாறு பிரதிநிதிகள் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தார்கள். (மா)

## கரையொதுங்கிய வயோதிபர் சடலம்

புலோலி, ஞாயிறு

பருத்தித்துறை கறகோவளம் கடற்கரையில் காயங்களுடன் கரையொதுங்கிய இனந்தெரியாத வயோதிபர் ஒருவரின் சடலம் நிர்வாணநிலையில் கண்டுபிடிக்கப்பட்டது. இச்சடலம் சில போராளிகளால் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## தள்ளாடி...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

போராளிகள் நடத்திய சிலிண்டர் தாக்குதலில் ஒரு 'பவலோ' கவச வாகனம் சிககுண்டதினால் அதில் பயணம் செய்தவர்கள் கொல்லப்பட்டார்கள்

இப்பகுதியில்எமதுபோராளிகளால் சுற்றிவளைக்கப்பட்ட நிலையிலுள்ள இராணுவத்தினருக்கு உணவு போன்ற உவிகள் கிடைக்காவண்ணம் எம்மால்தடைசெய்யப்பட்டுள்ளது.

இத்தாக்குதல் நடவடிக்கையினால் இராணுவத் தரப்பில் பலத்தசேதம் ஏற்பட்டுள்ளது எமது தரப்பில் மூவர் காயம் அடைந்துள்ளனர்.

### கிளிநொச்சியில்

இதேவேளை கிளிநொச்சி இராணுவமுகாமிலிருந்து நேற்றுக்காலை வெளியே வந்த இராணுவத்தினர் ஜெயந்திபுரம் திருநகர் ஆகிய பகுதிகளை முற்றுகையிட முயன்றபோது எமது போராளிகள் நடத்திய தாக்குதலினால் இராணுவத்தினர் பின்வாங்கினார்கள.

சுமார் மூன்றரை மணித்தியாலங்கள் எமது போராளிகளுக்கும் இராணுவத்தினருக்குமிடையில் இங்கு நேரடி மோதல் இடம்பெற்றது.

எமது தரப்பில் எவ்வித சேதமும் இல்லை பின் வாங்கிய இராணுவத்தினர் முகாம் நோக்கிச் செல்லும் வழியில் பொதுமக்கள் மீது நடத்திய தாக்குதலில் மூன்று பேர் இறந்துள்ளதுடன் பலர் காயமடைந்துள்ளனர். [து-மா]

## பௌத்தர்கள்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

யினமக்களுக்கு மேலும் கூடுதல்சலுகை வழங்கவேண்டும்

இப்பிரச்னைக்கான தீர்வு, ஐக்கிய இலங்கை என்ற கூட்டமைப்புக்குள்ளேயே அமையவேண்டுமென்று இந்திய மத்திய அரசு விரும்புகின்றது இலங்கை இனப்பிரச்னைத் தீர்வுக்கு இலங்கை அரசு உறுதியுடன் செயல்படவேண்டும்'' என்று கூறினர்.

(வா)

## கண்டன...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பில் அதன் செயலாளர் ஏ விஜயானந்தன் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: ''இந்த அனுமதிப்பத்திரம் வழங்கும் முறையில் தமிழ் முஸ்லீம் வாகனச் சொந்தக்காரர்களையே விடும்ததந்திரத்தையும் அதிகாரபீடம் கையாள எத்தனிக்கின்றது இந்த அனுமதிப்பத்திர முறை உடனடியாக ரத்துச் செய்யப்படவேண்டும்

இந்த அனுமதிப்பத்திர முறைக்கு எதிர்ப்பு தெரிவித்து நாளை மறுதினம் லொறி உரிமையாளர்கள் நடத்தவுள்ள ஊர்வலத்திற்கு எமது இணைப்புக்குழு முழுமையான ஆதரவை தெரிவிக்கின்றது''

(து)

## வெடிவிபத்தில் இருபோராளிகள் மரணம்

யாழ்ப்பாணம். திங்கள்

வெடிமருந்து பரிசோதனையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த சமயம் ஏற்பட்டவிபத்தில் தமிழீழவிடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த இரு போராளிகள் இறந்துள்ளனர்.

நேற்றுக்காலை இச்சம்பவம் இடம்பெற்றது

இந்தவிபத்தில் இறந்த நிசந்தன் (கொங்காதரன் காத்தான்குடி, மட்டக்களப்பு), தேவா (சிறீகாந்தன் யாழ்ப்பாணம்) ஆகிய போராளிகளுக்கு வீரவணக்கத்தை தெரிவித்து தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளனர். (து)

## சூட்டுக்காயங்கள்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்கவைத்தியசாலைகளின் பொறுப்பதிகாரிகளுக்கும் அனுப்பிவைத்துள்ள சுற்றுநிருபம் ஒன்றில் அறிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள சுகாதாரத் திணைக்கள தலைமை அலுவலகத்திலிருந்து இது தொடர்பாக விடுக்கப்பட்டுள்ள பணிப்புரையைஅடுத்தே இந்த சுற்றுநிருபம் யாழ். பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளரினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜூன் மாதம் 10-ம் திகதியிலிருந்து யாழ் மாவட்டத்திலுள்ள அரசாங்க வைத்தியசாலைகளில் வெளிநோயாளர் பிரிவிலும், வார்ட்டுகளிலும் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுக்காக சிகிச்சைபெற்றவர்களின் பெயர், முகவரி, ஆணா பெண்ணா என்ற விபரம் ஆகியவற்றை அனுப்பி வைக்கவேண்டுமென்றும் இந்த சுற்றுநிருபத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது.

## களஞ்சியப்பகுதி இடமாற்றம்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ் நகரமண்டபத்தின் கிழக்குப் புறமாக இருந்த மின்சார வேலைக்கான பொருட்கள் உள்ள களஞ்சிய அறை தற்போது நல்லூர் திணைக்கும் காரியாலயத்திற்குப் பின்னாலுள்ள களஞ்சிய அறைக்கு மாற்றப்பட்டுள்ளது

தற்சமயம் நகர மண்டபத் தருகே மாநகர வேலைத்தலப் பகுதியின் சில பகுதிகள் மட்டுமே இயங்குகின்றன. (ஐ)

## மீனவர் நலன்பேண ஒரு சங்கம்

யாழ்ப்பாணம், திங்கள்

துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் யாழ் ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்றுவரும் இந்திய மீனவரின் நலன்களை யாழ். அரசினர் பொது வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கம் மேற்கொண்டு வருகிறது

தமிழ்நாடு இராமேஸ்வரத்திலிருந்து மீன்பிடிக்கச்சென்ற 5 மீனவர்களை இப்படகுகளில் தேடிச்சென்ற 10 மீனவர்களில் 9 பேர் கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டதும், ஒரு மீனவர் துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் உயிர்தப்பி யாழ் ஆஸ்பத்திரியில் போராளிகளால் அனுமதிக்கப்பட்டதும் தெரிந்ததே

யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இராமேஸ்வரத்தைச் சேர்ந்த வே. கணபதி என்பவருக்கு தகுந்த சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும் பொதுமக்களும் நோயாளர் நலன்புரிச்சங்கமும் அவருக்கு வேண்டிய உதவிகளை செய்துவருவதாகவும் நலன்புரிச்சங்க உத்தியோகத்தர் திரு அ விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். (மா)

## நூல் மதிப்பீடு

நூல்: பாரத இதிகாசத்தில் வரும் பாத்திரங்களின் குண வியப்பு.(க. பொ. த. ப. வகுப்புக்குரியது)

வெளியீடு: தமிழ் வளர்ச்சிக் கழகம். காரைநகர்.

விலை:- ரூபா 7-50.

பாத்திரங்களின்குணவியல்புகளை ஆராயும் மனப்பாங்கு மாணவப் பருவத்திலேயே மூளை கொள்ளவேண்டுமென்பது உள நூல் வல்லாரின் முடிபாகும். இந்த முடிபை ஏற்ற கல்வித்திணைக்களத்தினர், க. பொ. த. ப. (சா/த வகுப்பு மாணவர்களுக்குப் பாரதச் சுருக்கத்தை ஒரு பாடநூலாக, அந்நூலில் வரும் பாத்திரங்களின் குணவியல்பு பற்றிய ஒரு வினவையும் பரீட்சை வினாத்தாளில் இடம் பெறச் செய்திருக்கிறார்கள். இந்த வினவுக்கு விடை எழுதக்கூடியதாக மாணவர், சிந்தனையைத் தூண்டக்கூடியவகையில் எழுதப்பட்டதே இந்த நூலாகும். இந்நூலில், தருமன் முதலான பதினன்கு பாத்திரங்களின் குணவியல்புகள் வெவ்வேறு தலைப்புக்களின் கீழ் காய்தல் உவத்தல் இன்றி மிகமிக நுணுக்கமாக நன்கு ஆராய்ந்து எழுதப்பட்டுள்ளன மாணவர்களுக்கு மாத்திரமன்று, இலககிய இரசிகர்களுக்கும் இந்நூல் ஒரு நல் விருந்தாகும்.

— வாசகன்

## கல்வி வளர்ச்சிக் கழகத்தின் செயல் திட்டங்கள்

உடுவில், ஞாயிறு

உடுவில் சல்வி வலய கல்வி முன்னேற்றக்சழகம் தமது எல்லைக்குட்பட்ட பாடசாலைப் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சி கருதி பல செயல் திட்டங்களை அமுல் நடத்த தீர்மானித்துள்ளது.

மானிப்பாய் வட்டாரத்தில் உடுவில் வலயத்தில் அமைந்துள்ள பாடசாலைகளின் நூல் நூல்நிலையங்களுக்குபயனுள்ள நூல்களை சேகரித்து வழங்குவதற்கு கல்வி வளர்ச்சி சபை தீர்மானித்துள்ளது.

மேலும் உடுவில் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு ஆங்காங்கே இலவச கல்வி வழங்கி வரும் பணியை விஸ்தரிப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது அத்துடன் க. பொ. த. சாதாரண வகுப்பு மாணவர்களுக்கு இக் கழகத்தின் ஆதரவில் இலவச வகுப்புகள் உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயத்தில் தற்போது நடைபெற்று வருகின்றன.

மேலும் இவ்வலயபாடசாலைகளுக்கிடையே உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயத்தில் ஒரு விளையாட்டு போட்டியையும் நடாத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

உடுவில் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற உடுவில் வலய கல்வி வளர்ச்சி கழகத்தின் கூட்டத்தில் இம் முடிவுகள் எடுக்கப்பட்டன.

கழகத் தலைவரும் முன்னாள் யாழ். இந்துக் கல்லூரி அதிபருமான திரு. பி. எஸ். குமாரசாமி தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது.



## ‘குணப் பல நிரம்பிய குணவதன்”

செல்வன் ந குணவதன் இவ்வுலகைவிட்டு திடீரென அகால மரணமான செய்தி கேட்டு மகாஜனக் கல்லூரி சோகத்தில் தத்தளித்தது. இன்று எமது மண்ணில் எங்கும் அகாலமரணங்கள்தான். ஒவ்வொரு நாளும் விடிந்ததும் விடியாத இருண்ட பொழுதுகள்.

இவரின் திடீர் மறைவு அவரது குடும்பத்தினரை மட்டுமட்டுமல்ல, ஊரார், நண்பர்கள் ஆசிரியர்கள் அனைவரையுமே ஆறுத்துயரத்தில் ஆழ்த்தியுள்ளது இவ்வுலகில் ஈராறு வருடங்கள்தான் வாழ்ந்தவர். இக்குறுகிய காலத்திலும் இவரின் சாதனைகள் பல பதுளை நகரில் ஒருடாக்டருக்கு அருமை மகனைப் பிறந்த ஒருசமுகசேவையாளன்

இவர் தனது சொந்த ஊரான சண்டிலிப்பாயில் ஆரம்பக் கல்வியைக் கற்கும் காலத்தில் கல்வியில் முதல் மாணக்கனைத் திகழ்ந்தார். சிறுவயதிலேயே பாடசாலையில் நாடகம், பேச்சு, போன்ற துறைகளில் சிறந்து விளங்கி பல போட்டிகளிலும் பல பரிசில்களை பெற்றார்.

எவருக்கும் இவருடன் பழகுவதற்கு விருப்பம். ஏனெனில இவரின் பண்பான பேச்சு, கள்ளமற்ற புன்சிரிப்பு எல்லோரையும் கவரக் கூடியது, இதுமட்டுமல்ல இவருடன் கூடிப்பிறந்த சமூகசேவை மனப்போக்கு சுயநலமின்மை எல்லோரையும் கவர்ந்தது.

மகாஜனா கல்லூரியில் இரண்டுவருடங்களும் மூன்று மாதமும் முழுமையாக கல்வி பயின்ற இவரை தொடர்ந்து கற்க காலன் விடவில்லை. ஆனால் ஒன்று மட்டும் உண்மை எமது மண்ணில் இன்று அன்றாடம் நடக்கும் துயரச் சம்பவங்களிலிருந்து மீண்டும் உண்மையான புண்ணிய உலகிற்குச் சென்றுவிட்டார். இவரின் ஆத்மா சாந்தியடைவதாக.

எஸ். சிவானந்தன்.

## இடமாற்றம்

சுண்டுக்குளி, ஞாயிறு

யாழ், செயலக ஒய்வூதியக் கிளையில் லிகிதராகப் பணி புரிந்த திரு. எம். பாலசுப்பிரமணியம் இம்மாதம் தொடக்கம் வேலணை உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு இடமாற்றம் பெற்றுள்ளார்.

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

மரணச்சொத்து நியாயாதிக்கம் } இல: T/279

இளவாலைவடக்கு சின்னத்தம்பி சீவரத்தினம் என்பவரின் மாணசாதனமற்ற மரணச்சொத்துக்கள் சம்பந்தப்பட்ட விடயத்தில் சீவரத்தினம் விஜயசிங்கம் -மனுதார்

மரணமெய்தியவர்

1. அருளானந்தம் கைம்பெண் சாரதாமணிதேவி
2. முருகையா தேவதாசனும் பெண்
3 இந்திராவும் - எல்லோரும் இளவாலை

—எதிர்மனுதார்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணச்சொத்து வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட மரணமெய்தியவரின் மரணசாதனமற்ற மரணச் சொத்துக்களை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்படடுள்ளதென இத்தால் அறிவிக்கப் படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1986ம் ஆண்டு யூலை மாதம் 16-ம் திகதி முற்பக 9-00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் இந்நீதிமன்றத்தின் முன்னர் தோற்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதுக்கட்டளை ஏன் முற்றான கட்டளையாக்கப்படலாகாது என்பதற்கு ஏதும் எதிர்க்காரணம் இருப்பின் தெரிவிக்குமாறு இத்தால் தேவைப்படுத்தப் படுகின்றார்கள்.

1986ம் ஆண்டு யூன் மாதம் 16ம் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி,
வி. இராமச்சந்திரஐயர்,
பதிவாளர்.

தயாரித்தது:
க. வ பாலசிங்கம்,
மனுதாரின் சட்டத்தரணி.
(C 3420)

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## மருந்துகள் வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம். திங்கள்

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கான மருந்து வகைகள் பல சிரமத்தின் மத்தியில் நேற்று முன்தினம்யாழ்ப்பாணம்வந்து சேர்ந்தன.

## தற்பாதுகாப்பு பயிற்சி

கொழும்பு, ஞாயிறு

கொழும்பிலுள்ள இராணுவ முகாம் ஒன்றில் தற்பாதுகாப்பு, மற்றும் போர் நடவடிக்கைகளின் போது எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்ற வழிகாட்டல்கள் குறித்து உதவி அரசாங்க அதிபர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது.

கடந்த புதன்கிழமை ஆரம்பமான இப்பயிற்சிக்கு வடக்கு கிழக்குப் பகுதியிலுள்ள சகல உதவி அரசாங்க அதிபர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (பி)

## ஆசிரியர் வெற்றிடம் நிரப்ப வேண்டும்

வவனியா, ஞாயிறு

வவனியா பகுதியில் கிராமப்புற பாடசாலைகளில் உள்ள வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும், இது சாத்தியப்படாவிடத்து நகரப்புற பாடசாலைகளுக்கு கூடுதலாக வுள்ள ஆசிரியர்களை கிராம பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யக்கோரும் தீர்மானம் ஒன்று வவனியா பிரதேச சபைக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேறியது.

சபைத் தலைவர் என். சேனாதிராஜா தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.


## பிரயாண ஒழுங்குகள்

டென்மார்க் கனடா
ஜேர்மனி பிரான்ஸ்

ஆகிய நாடுகளுக்கு நேரடிப் பிரயாண ஒழுங்குகள் உடனடியாக எம் முகவர் உங்களைக் கூட்டிச் செல்வார்.

காரியாலயத்தில் உடனடியாக தொடர்பு கொள் கொள்ளுங்கள்.

★ சவுதி அரேபியா ★ மத்தியகிழக்கு நாடுகளில் வருமான ஒழுங்கு ஆண், பெண் இருபாலருக்கும் உண்டு

பாஸ்போட், பொன்ட் கூடிய கெதியில் குறைந்த செலவில் செய்து தரப்படும்:

GROUP ATLANTIC

163, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(அடைக்கலமாதா கோயில் முன்பாக)
(A 779)



## பிரயாண ஒழுங்குகள்

டென்மார்க், கனடா

(கொழும்பிலிருந்து நேரடிப் பிரயாணம்)

ஜூலை 15-ம் திகதி எமது முகவர் கூட்டிச்செல்வார்.

எமது காரியாலயத்தில் பதிவு செய்தவர்கள் உடனடியாகத் தொடர்பு சொள்ளவும்.

லிபியா குவைத்
சவூதி அரேபியா

ஆகிய நாடுகளுக்கு வேலை வாய்ப்பு.

அத்துடன்

பாஸ்போட், BOND, ரிக்கற்றிங் ஆகியனவும் உடனடியாகச் செய்து கொடுக்கப்படும்.

யூனிவேர்சல் ஏஜென்சி,

125 (455), ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(ஆயுர்வேதக் கல்லூரிக்கு அருகாமையில் பெற்றோலியம் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக.)
(A 774



## பிரயாண ஒழுங்குகள்

கனடா ஜேர்மனி
பிரான்ஸ் டென்மார்க்

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்ளவும்
மற்றும்
பாஸ்போட், பொன்ட் (BOND),
விஸா, ரிக்கற் ஆகியனவும்
செய்துகொடுக்கப்படும்.

INTERSUN GROUP,

சின்னத்தம்பி அவெனியு,
(மகளிர் கல்லூரி அருகாமை),
மானிப்பாய். [A 787]


## 31-ம் நாள் நினைவஞ்சலி



சீமெந்து அடைப்பு நிலைய முகாரி

அமரர்

**நா. கயிலாயநாதன்**

தாயின் மடியில்:
08-07-1944

இறைவன் அடியில்:
14-06-1986

ஐயகோ ஒரு பேரிடியை
அமிழ்த்தினயோ
எம் தலையில்
ஐயாவென்றும்
அன்புமிகு அண்ண
னென்றும்
தோழமையான நண்ப
னென்று முனைச்சுற்றி
வந்தோம்
கேளாமலேயெமை
விட்டகன்றாய், ஐயா
கோடேதுமில்லை யுமைக்
கூப்பிட்டழைக்க.

உங்கள் பிரிவால்
துயருறும்:
சீமெந்து அடைப்பும்,
லொக்கோ பகுதி
உத்தியோகத்தர்களும்,
ஊழியர்களும்.
காங்கேசன்துறை.
(C 3465)

## ஊழியர் தாக்கப்பட்டதால் மின்சாரம் துண்டிப்பு

மாவிட்டபுரம், ஞாயிறு

சட்டவிரோத மின் இணைப்பை துண்டிக்கச் சென்ற மின்சார ஊழியர்கள் தாக்குதலுக்குள்ளானதன் எதிரொலியாக மயிலிட்டி பிள்ளையார் வீதிக்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டது.

மேற்படி வீதியில் இணைக்கப்பட்டிருந்த சட்டவிரோத மின்பாவனை சம்பிகளை அகற்றுவதில் ஈடுபட்டிருந்த காங்கேசன்துறை உப அலுவலக மின்சார ஊழியர்கள் சிலரால் தாக்கப்பட்டதன் காரணமாக அவ்வீதிக்கான மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு துண்டிக்கப்பட்ட மின்சாரத்தை மீண்டும் வழங்குமாறு உப அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. வ. மகாலிங்கத்திடம் அப்பகுதி மக்கள் கோரியதையடுத்து சட்டவிரோத மின்பாவனையை நிறுத்துவதாகவும், கடமையில் ஈடுபடும் மின்சார ஊழியர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதாகவும் உறுதி தந்தாலே அவ்வீதிக்கு மின்சாரம் வழங்கப்படுமென அவர் நிபந்தனை விடுத்துள்ளார்.

## மாவை உற்சவத்தில் முதலுதவி முகாம்

பண்டத்தரிப்பு, ஞாயிறு

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் முதல் சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையின் முதலுதவி முகாம் ஆலய உற்சவம் முடிவடையும் காலம்வரை ஆலய வீதியில் செயற்படவுள்ளது. படையின் வடபிரதேச ஆணையாளர் டாக்டர் சுகந்தன் இன்னாசித்தம்பி இதுபற்றித் தெரிவிக்கையில் படையின் தொண்டர்கள் வீதி ஒழுங்கு, பாதுகாப்பு ஆகிய கடமைகளிலும் ஈடுபடுவார்கள் என்றும் இம்முறை கணிசமான அளவு பெண் தொண்டர்களும் சேவையிலீடுபடுவார்கள் என்றும் பிரதேச அத்தியட்சகர் திரு. நா. போஜன் இந்த முகாமுக்குப் பொறுப்பாக இருப்பார் என்றும் தெரிவித்தார்.

## நால்வர் விடுதலை

மண்டைதீவு, ஞாயிறு.

கடந்த மாதம் 10ம் திகதி மண்டைதீவுக் கிராமத்தினுள் நுழைந்த பாதுகாப்புப் படையினரால் கூட்டிச்செல்லப்பட்ட ஆறு இளைஞர்களில் இதுவரை நான்கு பேர் அவர்களது பெற்றோர் முன்னிலையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

## வீடுகள்மீது கல்வீச்சு

பண்டத்தரிப்பு, ஞாயிறு

சில்லாலை தெற்கைச்சேர்ந்த செட்டியடைப்புப் பகுதியிலுள்ள மூன்று வீடுகள் இரவு வேளையில் மர்ம கல்வீச்சுக்கு இலக்காகி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மூன்று மாத காலமாக நடைபெற்று வரும் இக்கல் வீச்சினால் வீட்டிலுள்ளவர்கள் காயமடைந்துள்ளதாகவும். ஓடுகள் சேதமடைந்துள்ளதாகவும், இதனால் இவ்வீடுகளில் உள்ளவர்கள் மிகுந்த பீதியுடனும் அச்சத்துடனும் இருந்து வருவதாகவும் இதுபற்றித் தெரிவிக்கப்படுகிறது.


நெஸ்டோமோல்ட்
பருகத் தகுந்த தருணம் இதுவே!





நீங்களும் உங்கள் குடும்பத்தினரும் அன்றாட வேலைகளினால் ஏற்படும் - உடற்களைப்பும் மனக்களைப்பும் நீங்கி புத்துணர்வுடனும் உற்சாகத்துடனும் விளங்க நவ நெஸ்டோமோல்ட் இப்பொழுது 12 அத்தியாவசிய விட்டமின்களால் வளமூட்டப்பட்டுள்ளது.

நெஸ்டோமோல்ட் ஊட்டச்சத்துமிக்க பூரண ஆரோக்கிய பானம். பாலும் மோல்டட் பார்லியும் கொண்டு தயாரிக்கப்பட்டு அத்தியாவசிய விட்டமின்களால் செறிவாக்கப்பட்டுள்ளது.

தினமும் நெஸ்டோமோல்ட் பருகுங்கள். அது புத்துணர்வூட்டும் சுவையான சுடுபானம். குளிரூட்டியும் பருகலாம். உங்களுக்கு மேலதிக விட்டமின்கள் கொண்ட நெஸ்டோமோல்ட் தேவைப்படும் தருணம் இதுவே.




NESTOMALT®
MALTED MILK




விலை - 450 கி. ரு. 44/- 250 கி. ரு. 26/-

JWT NL 1682

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

திங்கட்கிழமை 14-7-86

## அரச அதிபரை சந்தித்தனர்

யாழ்ப்பாணம் திங்கள்.

லொறி உரிமையாளர் சங்கத் தலைவர், செயலாளர் ஆகியோர் யாழ் அரசாங்க அதிபரைச் சந்தித்து தமது நிலைமையை நேற்று எடுத்துக்கூறினர்

லொறி உரிமையாளர் சங்கத்தினரால் இராணுவ அனுமதிப் பத்திர முறையை எதிர்த்து எதிர்வரும் 16ம் திகதி ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று நடைபெறவுள்ளது. (ஐ)

## 'புலிகளின் குரல்'

யாழ்ப்பாணம், திங்கள்.

யாழ். குடாநாட்டிலுள்ள பிரதான சந்திகள் தோறும் 'தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவினால் 'புலிகளின் குரல்' என்னும் செய்திப் பலகைகள் வைக்கப்பட்டுள்ளன.

இச் செய்திப் பலகைகளில் போராளிகளின் தாக்குதல் சம்பவங்கள், முக்கியமான அரசியல் குறிப்புகள் நேரத்துக்கு நேரம் எழுதப்பட்டிருப்பதை ஏராளமான மக்கள் செய்திப் பலகைகள் முன்னால் குழுமி நின்று அவற்றில் எழுதியிருக்கும் தகவல்களை வாசிப்பதையும் காணக்கூடியதாக இருக்கிறது. (மா)

"இலங்கை அரசியல் அமைப்பில்

# மனித அடிப்படை உரிமைகள் விகடமாக்கப்பட்டுள்ளன"

## இந்திய அறிஞர் கருத்து

புதுடில்லி, திங்கள்

"இலங்கை அரசியல் அமைப்பில் மனித அடிப்படை உரிமைகள் விகடத்துக்குள்ளாக்கப்பட்டுள்ளன". என்று முன்னாள் இந்திய சுப்ரீம்கோட் நீதிபதி திரு வி. ஆர். கிருஷ்ண ஐயர் கூறியுள்ளார்

இலங்கைத் தமிழருக் கெதிராக உணர்ச்சிகள் தூண்டிவிடப்படுகின்றது தமிழர்களின் தனித்துவத்தை பலவீனப்படுத்துவதற்காக அடிக்கடி அங்கு அரசியலமைப்பு திருத்தப்படுகின்றது, என அவர் கூறினார்.

இந்தியா-இலங்கை மைத்திரி சங்கத்தினால் ஒழுங்குசெய்யப்பட்டிருந்த கூட்டத்தில் திரு ஐயர் மேற்கண்டவாறு கூறினார்.

[திரு கிருஷ்ணஐயரின் மேற்படி சொற்பொழிவின் சிலபகுதிகள் ஏற்கனவே பிரசுரிக்கப்பட்டுள்ளன.]

"இலங்கையில் தமிழருக்கெதிரான நடவடிக்கைகள் தொடருமானால் பல்தேசிய வாதிகளால் இலங்கை விழுங்கப்பட்டுவிடும் இலங்கை அடிமைகளின் கல்லறைதான் மிஞ்சியிருக்கும்" என்றார் கிருஷ்ண ஐயர்.

இந்தக் கூட்டத்தில் திரு. என் ராம் என்பவர் பேசும் போது; "இலங்கைத் தமிழர்கள் முன்னெப்போதுமில்லாத வகையிலான கஷ்டங்களை அனுபவித்துள்ளார்கள் எனவே ஒரு அரசியல் தீர்வு ஏற்படுவதற்கு இந்திய மத்திய அரசு உதவுவதாய் இருந்தால் இலங்கைத் தமிழர்கள் பாரபட்சத்துக்கும் ஒடுக்குமுறைக்கும் எதிராகவும் சமத்துவம் அரசியல் உரிமைகளுக்காகவும் நடத்தியுள்ள போராட்டங்களின் அடிப்படை அனுபவங்களை கவனத்தில் கொள்ள வேண்டும்" என்றார்.

இலங்கை இனசமத்துவநீதி இயக்கத்தின் தலைவர் திரு. சார்ள்ஸ் அபயசேக்கர பேசும்போது "அதிகாரப்பரவலாக்கல் கையளிக்கப்படும் போது தமிழ்மக்கள் வாழும் பிரதேசங்கள் முழுவதும் உள்ளடக்கப்பட வேண்டும்". என்றார்.

இப்போதைய யோசனைகள் தமிழ் சிங்கள மக்கள் தமது உரிமைகளைப் பூரணமாக அனுபவிப்பதை உறுதிப்படுத்தவில்லை ஆனால் அடிப்படை பிரச்னைகள் எதிர் கொள்ளப்படவும், திருப்தியான அரசியல் தீர்வுகாணவும் உதவும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது" என்றார்.

வண. திஸ்ஸபாலசூரிய பேசும்போது "தனிப்பட்டவர்களும் குழுக்களும் ஒன்று சேர்ந்து அமைதி இயக்கம் ஒன்றை ஆரம்பிக்க வேண்டும் சிங்களவர், தமிழர், முஸ்லிம்களின் ஒன்றிணைப்பு வேண்டும் தமிழர்கள் அமைதியாக வாழக்கூடிய ஒரு அரசியல் பொருளாதார அமைப்பு ஒன்றை உருவாக்கும்படி இலங்கைத் தலைவர்களை வற்புறுத்த வேண்டும்" என்றார்.

சகலரும் ஏற்றுக்கொள்ளும் தீர்வொன்றை உருவாக்கும் விதத்தில் தென்னிலங்கை அரசியல் கட்சிகளுக்கிடையில் ஓர் இணக்கத்தை இலங்கை அரசு ஏற்படுத்த வேண்டும். இலங்கை சிறிலங்காசுதந்திரக் கட்சி தனது குறுகிய அரசியல் போக்கிலிருந்து விடுபட்டு பிரச்னை தீர்வதற்கு உதவ வேண்டும்" என்றார்.

## தமிழ்க்குழுக்களுடன் சந்திப்பு குமாரணதுங்க திருப்தி!

[சென்னை]

இலங்கை மக்கள் கட்சித் தலைவர் திரு. விஜயகுமாரணதுங்க இலங்கைத் தமிழ்தீவிரவாதக்குழுக்களின் பிரதிநிதிகளை கடந்த 10ந் திகதி சென்னையில் சந்தித்தார். அவர் இச் சந்திப்புக்குறித்து மிகுந்த திருப்தி வெளியிட்டுள்ளார்.

ஈரோஸ் அமைப்பு சார்பில் பாலகுமார், ரட்ணசபாபதி ஆகியோரும் ஈ பி ஆர். எல், எவ். சார்பில் கேதீஸ்வரன் கிருபா ஆகியோரும் ரெலோ சார்பில் மதி, கிருபா ஆகியோரும் திரு குமாரணதுங்காவைச்சந்தித்தனர்.

கடந்த 10ந் திகதி வியாழக்கிழமை காலை சுமார் ஒரு மணி நேரம் இச்சந்திப்பு இடம் பெற்றது தொடர்ந்து பிற்பகல் தமிழீழ மக்கள்விடுதலைக் கழகத்தலைவர் திரு. உமா மகேஸ்வரனை திரு. குமாரணதுங்க சந்தித்துப்பேசினர்.

இச்சந்திப்புக்களையடுத்து செய்தியாளர்களுக்கு அவர் கருத்து வெளியிடுகையில், தமிழ்த் தீவிரவாதத் தலைவர்களுடனான சந்திப்பு திருப்திகரமானதாக அமைந்திருந்தது எனக் கருத்து வெளியிட்டார்.

## பிரசுரங்கள்

கொழும்பு, ஞாயிறு

ஜே. வி. பியைச்சேர்ந்தனர் எனக்கருதப்படும் சிலர் கொழும்பிலுள்ள உயர் பொலிஸ் அதிகாரிகள் வீட்டு வளவுக்குள் அரச எதிர்ப்பு துண்டுப்பிரசுரங்களை வீசியதாக அறியவந்துள்ளது.

இப்பொலிஸ் அதிகாரிகளின் வீடுகளிற்கு அளிக்கப்பட்டுள்ள பாதுகாப்பையும் மீறியே இத் துண்டுப்பிரசுரங்கள் போடப்பட்டிருப்பதாகவும் தெரிய வந்துள்ளது.

கிளிநொச்சி ஆஸ்பத்திரி மூடப்பட்டதால்

# டாக்டர்கள், ஊழியர்கள் தற்காலிக இடமாற்றம்

கண்டத்தரிப்பு ஞாயிறு.

கிளிநொச்சி அரசினர் வைத்தியசாலை தற்காலிகமாக மூடப்பட்டு மாவட்ட வைத்திய அதிகாரி உட்பட சகலஊழியர்களும் வேறு இடங்களிலுள்ள அரசினர் வைத்தியசாலைகளுக்கு தற்காலிகமாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்

இது தொடர்பான சுற்றறிக்கைக் கடிதம் ஒன்றை சம்பந்தப்பட்ட ஊழியர்களுக்கு யாழ். பிரதே சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் அனுப்பி வைத்துள்ளது. இதன் பிரகாரம் கிளிநொச்சி வைத்தியசாலை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். சத்தியசீலன் தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலைக்கும், பல் சிகிச்சைப் பிரிவு வைத்திய அதிகாரி டாக்டர் (திருமதி) எஸ் சிவபாதசுந்தரம் கோப்பாய் அரசினர் வைத்தியசாலைக்கும், உதவி வைத்திய அதிகாரிகள் டாக்டர் எஸ். சிவயோகநாதன் வட்டக்கச்சி மத்திய மருந்தகத்திற்கும், டாக்டர் எம் சந்திரசேகரம் உருத்திரபுரம் அரசினர் வைத்தியசாலைக்கும் தற்காலிகமாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்கள். இதே வேளை இவ் வைத்தியசாலையில் சேவையாற்றி வந்த அம்புலன்ஸ் வாகனம் உருத்திரபுரம் அரசினர் வைத்தியசாலையில் தரித்து நின்று சேவையாற்றும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இங்கிருந்து கடுமையான நோயாளர்களை அக்கராயன் குளம், பூநகரி அரசினர் வைத்தியசாலைக்கு ஏற்றிச் செல்ல இந்த அம்புலன்ஸ் வாகனம் பயன்படுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## மரண அறிவித்தல்

### நீ. மு. குமாரசாமி

புங்குடுதீவு 12-ம் வட்டாரத்தைச் சேர்ந்த திரு. நீ. மு குமாரசாமி 12-7-86 சனிக்கிழமை அதிகாலை காலமானார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 12-7-86 சனிக்கிழமை பிற்பகல் நான்கு மணியளவில் அவரது மூத்தமகன் திரு. சண்முகராசாவின் [இ. போ. ச. மன்னார்] இல 32, ஆஸ்பத்திரிவீதி, கொட்டடி யாழ்ப்பாணத்திலுள்ள இல்லத்தில் நடாத்தப்பட்டு வில்லூண்டி மயானத்தில் தகனஞ் செய்யப்பட்டது. போதிய அவகாசம் இன்மையால் உறவினர்களுக்கும், அன்பர்களுக்கும் அறிவிக்கமுடியவில்லை என்பதை மிகமனவருத்தத்துடன் அறியத்தருகின்றேன்.

[C 3474] கு. சண்முகராசா.

### முருகுப்பிள்ளை வரதுங்கன்
உடுப்பிட்டி

காலம்சென்ற திரு. திருமதி. முருகுப்பிள்ளையின் சிரேஷ்ட புதல்வனும் த. வீரவாகுவின் மருமகனுமாகிய முருகுப்பிள்ளை வரதுங்கன் (இளைப்பாறிய உப அதிபர்) 13-7-86 காலமாகிவிட்டார். இவர் இராசம்மாவின் அன்புக்கணவரும், அருட்திரு இராஜ்குமார் (புங்குடுதீவு திருச்சபை போதகர்), அவர்களின் அன்புத் தந்தையும், திருமதி மகேஸ்வரி இராசரத்தினம் (இளை அதிபர் வல்வை மகளிர் மகாவித்தியாலயம்), திருமதி இராஜேஸ்வரி இம்மானுவேல், திருவாளர்கள் ஜெயதுங்கம், குலோதுங்கம், விஜயதுங்கம் ஆகியோரின் அன்புச்சகோதரரும் திரு. இராசரத்தினம் (இளை. விவசாய உத்தியோகஸ்தர்), திரு. இம்மானுவேல் (சட்டத்தரணி), திருமதிகள் மாகிரட், அருமைமுத்து, Dr. இராஜேந்திரம், திருவாளர்கள் இராஜகுணநாயகம், இராஜசவுந்தரம், இராஜபூபதி, இராஜதேவி ஆகியோரின் அன்புமைத்துனரும், திரு அன்ரன் இராஜதுங்கம் Msc (பொறியியல் மாணவன், U K.) தர்சினி, அமிழ்தினி, வசீகரன் ஆகியோரின் அன்பு மாமனும், பாங்கரதுங்கன், வர்ணதுங்கன், சூரியதுங்கன், பிரேமினி, சாளினி, சாந்தினி, ஜெயந்தினி, வசந்தினி, விஞ்ஞேதினி, துஸ்சாந்தினி ஆகியோரின் பெரிய தகப்பனும், திரு. முத்துக்குமாரு இளை தபால்அதிபர்), செல்வி செல்லமுத்து (இளை, ஆசிரியர்), திருமதி காத்திகேசு, திரு. ஜெயதேவன் (இளை புகையிரத நிலைய அதிபர்) ஆகியோரின் சகோதரரும் ஆவார். இறுதி ஆராதனை உடுப்பிட்டி பரம் இல்லத்தில்நடைபெற்று நல்லடக்கம் தெல்லிப்பளையில் அவர்களது குடும்பகல்லறை தோட்டத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம். இறுதி ஆராதனைத் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

(C3475) திருமதி. M. இராஜரட்ணம்.

ஹென்றி பெரேரா வழக்கு——————

## சி. ஐ. டி. பொலிஸ் அதிபர் இன்று சாட்சியம்!

கொழும்பு, திங்கள்

தமிழீழமக்கள் விடுதலைக் கழகத்தைச் சேர்ந்த சிங்கள இளைஞரான ஹென்றி பெரேரா மீதான வழக்கு விசாரணைகள் இன்று கொழு. மேல்நீதிமன்றில் இடம் பெறும்.

கடந்த மாதம் 6ம் திகதி விசாரணைக்கு எடுக்கப்பட்ட ஹென்றிபெரேரா (வயது 31) மீதான வழக்கு இன்றுஜூலை 14ந் திகதிவரை ஒத்திப்போடப்பட்டிருந்தது.

ஹென்றிபெரேரா சார்பில் சட்டத்தரணி திரு. எம். சோமசுந்தரம் ஆஜரானார். இன்றையவிசாரணைகளின் போது குற்றப் புலனாய்வுத்துறை (சி ஐ. டி.) பொலிஸ் அதிபர் சந்திராஜயவர்த்தன சாட்சியமளிப்பார் என்றுதெரிவிக்கப்பட்டது

வத்தேகம என்ற இடத்தில் 66 கிறினேட்டுக்கள், 4 துப்பாக்கிகள் மற்றும் தமிழீழ பிரசார துண்டுப்பிரசுரங்களை வைத்திருந்ததாகக் குற்றஞ்சாட்டி 1984ம் ஆண்டு செப்டெம்பர் 3ந் திகதி ஹென்றி பெரேரா கைதுசெய்யப்பட்டிருந்தார்.

சிறையில் இவர் தமிழ்க் கைதிகளுடன் தாம் வைத்திருக்கப்படவேண்டுமெனக் கோரி உண்ணாவிரதமிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு ஜூலை மாதம் 14-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P. O. Box 49, Telegram, Eelanadu, Telephone 22389, 24126

## திருமலை அகதிகள்

சாவகச்சேரி, ஞாயிறு

திருமலையில் இடம்பெற்ற வன்முறைச்சம்பவங்கள் காரணமாக அங்கிருந்து சுமார் 50 பேர் அகதிகளாக மீசாலை வடக்குப் பகுதிக்கு வந்துள்ளனர்.

இவர்கள் தற்போது அப் பகுதியில் இருக்கும் தனியார் வீடுகளில் தங்கியிருக்கின்றனர்.

## சமநீதி சமாதான சபை உதயம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

தெல்லிப்பழை தென்மேற்கு கிராமசேவையாளர் பிரிவில் "சமநீதிசமாதான சபை" ஒன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

தலைவர் திரு. சீ. கனகசபை. செயலாளர் திரு நா. அரியபுத்திரன், பொருளாளர் திரு. செ. சிதம்பரநாதன் ஆகியோருடன் நாலு பேர்கொண்ட நிர்வாகசபையும் தெரிவுசெய்யப்பட்டது. [வா]